# சத்திய வேத பாதுகாவலன்

1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Tele{grams: "CATHOLIC PRESS", JAFFNA.
Tele{phone: No. 100.

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

81-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1956-ம் ஆண்டு வைகாசிமாதம் 3-ந்திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 16-ம் இலக்கம்


## சுதேச வர்த்தமானம்

### ஆசனக்கோவிலில் ஞானஒடுக்கம்

பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதாவின் ஆசனக்கோவிலையும், சுண்டிக்குளி சஞ்சுவாம்கோவிலையுஞ்சேர்ந்த பெண் பாலாரின் வருடாந்த ஞானஒடுக்கம் இம்மாதம் 6-ந்திகதியாகிய வருகிற ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி அடுத்த 13-ந்திகதி காலை முடிவாகும். வண. எம். எஸ். நல்லையா சுவாமியவர்கள் ஞானஒடுக்க போதகஞ் செய்யவிருக்கின்றார்.

### தேர்தல்ஆட்சேபனை மனு

சமீபத்தில் நடைபெற்ற பொதுத் தேர்தலிலே மாத்தளைப்பிரதிநிதியாகத் தெரியப்பட்ட திரு. நிமால் கருணதிலக என்பவரின் தேர்தலை ஆட்சேபித்து, மாத்தளையைச்சேர்ந்த திரு. ஹென்றி வீரசிங்கஎன்பவர் சென்றசனிக்கிழமை சுப்பிறீங்கோட்டுக்கு மனுப்பண்ணியிருக்கின்றார். இதுவே இம்முறைப் பொதுத்தேர்தலில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள முதலாவது தேர்தல் ஆட்சேப மனுவாகும்.

### புதிய அற்றேர்ணி-ஜெனறல்

நீதியரசர் திரு. கிறேஷன்அவர்கள் இம்மாதம் 2-ந் திகதி புதன்கிழமை முதல் அற்றேர்ணி-ஜெனறலாக நியமனஞ்செய்யப் பெற்றிருக்கின்றார். தற்காலிக அற்றேர்ணி-ஜெனறலாகக் கடமை பார்த்துவந்த திரு. ரி. எஸ். பெர்ணுண்டோ அவர்களும், தற்சமையம் அசைஸ்கமிஷனராகக் கடமைபார்த்து வருகின்ற திரு. என். சின்னத்தம்பி அவர்களும் முறையே இம்மாதம் 2-ம், 3-ம் திகதிமுதல் சுப்பிறீங்கோட்டு உபநீதியரசர்களாக நியமனஞ்செய்யப் பெற்றிருக்கிறார்கள்.

### சீனிவிலை குறைக்கப்பட்டது

அரசாங்கம் சீனியின் விலையையும் சென்ற 30-4-56 திங்கள்முதல் றாத்தல்ஒன்றுக்கு 5 சதம் குறைத்திருக்கின்றது. அதாவது இதுவரை றாத்தல் 60சதமாக விலைப்பட்டுவந்த பழுப்புச்சீனி அன்றுமுதல் 5சதம்குறைத்து 55 சதமாக விற்கப்பட வேண்டியது. ஆனால், சென்றவாரஇறுதிமுதல் இவ்விடமுள்ள கடைகளில் சீனிகிடையாமற்போகவே பலர் கடைகடையாய் அலைந்தார்களென்றுசொல்லப்படுகிறது. இப்போது பழுப்புச்சீனியின் விலையே குறைக்கப்பட்டதல்லாது வெள்ளைச் சீனியின் விலை குறைக்கப்படவில்லை.

### அர்ச். சூசையப்பர் திருநாள்

கொழும்புத்துறைத் தாபனத்திலே கோவில்கொண்டு, தம்மை அண்டிவருவாருக்கெல்லாம் அன்புமிக்க ஓர் அடைக்கலப்பிதாவாயிருந்துவருகின்ற தொழிலாளர்களின் பாதுகாவலரான அர்ச். சூசையப்பர்திருநாள் இம்மாதம் 6-ந்திகதியாகிய வருகிறஞாயிற்றுக்கிழமை வழமைபோல மிகுந்தபத்திச்சிறப்பாய்க் கொண்டாடப்படும். அன்று காலை 6-30மணிக்குத் திருநாள்பாடற்பூசை நிறைவேறும், சாயந்தரம் 4-30 மணிக்கு வேஸ்பர்பாடி முடிந்ததும் திருச்சுரூப சுற்றுப்பிரகாரத்தோடும், திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதத்தோடும் திருநாள்முடிவாகும். இலங்கையின் இரட்சாபிதாவாகிய அர்ச். சூசையப்பரின்திருஅடைக்கலத்திலே யாழ்ப்பாண மேற்றிராசனமுழுவதும் அன்று தொட்டுப்பகிரங்கமாக கோர்ந்துஒப்புக்கொடுக்கப்படுவது இப்பதியிலே இத்திருநாளின்போதேயாகும். ஆதலால், அர்ச். சூசைமாதவனின் பக்தர்களெல்லாம் முந்திய வருடங்களிற்போன்று இம்முறையும் அப்பதியிலே பெருந்திரளாகச் சமுகங்கொடுத்துத் தங்கள்மேலும், தங்கள்குடும்பங்கள்மேலும், தங்கள் செல்வநாட்டின்மேலும் அவரின் தவறாத அடைக்கலத்ஸ்தயும், ஆசீர்வாதத்தையும் இரந்து கொள்வார்களாக!

### கொலைசெய்யப் பயமில்லை

இலங்கையிலே தூக்குத்தண்டனை நிறுத்தப்பட்டுள்ளசெய்தியைப் பத்திரிகைகளில் படித்தறிந்ததும் மாத்தறையைச்சேர்ந்த திக்வெலைவாசியான ஒருவன் "இப்போது கொலைசெய்யப்பயப்படவேண்டியதில்லை" என்று சொல்லிவிட்டு, அதே கிராமத்தைச்சேர்ந்த மீன்வியாபாரி ஒருவனைவெட்டிக் கொலைசெய்திருப்பதாகப் பொலிஸ்அறிக்கை மூலம் செய்திவெளியாயிருக்கிறது. தன்னுடன் நியாயமானபணம் கொண்டு செல்லுகிறவனெனப் பிரசித்திபெற்ற அந்தமீன்வியாபாரியிடம் இவன் சென்று, சற்றே தூரத்தில்வசிக்கும் ஒருமனிதன் மீன்வாங்க ஆசைப்படுகிறானென்று சொல்லி அவனைத்தந்திரமாக அழைத்துச் சென்றான். செல்லும்வழியில் ஓர்பற்றைக்காடு வந்தது. அதனூடாகச் செல்லும்பொழுது இவன்ஆடையிலிருந்து ஓர்வாளை இழுத்தெடுத்து, அவனை வெட்டியபோது, அவனுடையகழுத்து ஏறக்குறைய முற்றாகத் துண்டிக்கப்பட்டுவிட்டது. பிந்த இவன் அவனுடைய பிரேதத்தைக் காட்டுக்கு இழுத்துச்சென்றானும். அப்போது கிராமாபிவிர்த்திச்சங்க அங்கத்தவர்கள் இருவர் அவனைப்பிடித்துப் பொலிசார்வசம் கையளித்தார்கள்.

### அரிசிவிலை 40 சதம்

தற்போது கூப்பனுக்கு வழங்கப்படுகின்ற பங்கீட்டரிசியின்விலை படிஒன்று 50சதமாகும். சென்றவியாழக்கிழமை காலை மந்திரிசபை நான்குமணிநேரம் ஆலோசித்தபின் அரிசியின்விலையிலே 10சதங்குறைத்துவிட வேண்டுமெனத் தீர்மானித்துள்ளது. இந்த விலைஇறக்கம் நிகழும் வைகாசிமாதம் 14-ந்திகதி திங்கட்கிழமையன்று நடைமுறைக்கு வரும். அதாவது அன்றுமுதல் பங்கீட்டரிசி படிஒன்று 40 சதமாக வழங்கப்படும். ஆனால், உள்நாட்டு நெல்லின் உத்தரவாதவிலையில் எவ்விதமாற்றமும் இருக்கமாட்டாது.

### இராசினாமாச் செய்வார்கள்

புதிய கல்வி மந்திரியாரான திரு. டபிள்யு. தஹநாயகஅவர்கள் காலிநகரசபையில் ஓர்அங்கத்தவராயும், அவாது பாராளுமன்ற காரியதரிசியான—அதாவது உதவிமந்திரியாரான திரு. பி. பி. ஏ. வீரக்கூன்அவர்கள் கண்டிநகரசபையில் ஓர்அங்கத்தவராயும் இருந்துவருகின்றார்கள். இவர்கள் மந்திரிசபையில் பதவிகள் ஏற்றிருப்பதாலே நகரசபை அங்கத்துவபதவிகளை இராசினாமாச் செய்ய விருக்கின்றார்கள்.

### புத்தஜயந்தி முத்திரைகள்

10சதம், 4சதம் பெறுமதியான புத்தஜயந்தித் தபால் முத்திரைகளை இம்மாதம் 10-ந்திகதியன்று பாவனைக்கு விடுதற்கான ஒழுங்குகளைச்செய்யும்படி தபால் - வானொலி - தகவல்மந்திரியார் தபாற்பகுதியைக் கேட்டிருக்கின்றார். அவ்விதம் பாவனைக்கு விடுவதாலே புத்தவிசாக சோபனவாழ்த்துகளை அனுப்புவதற்கு அவைகள் கிடைக்கக் கூடியனவாயிருக்குமாம். இன்னும் புத்தஜயந்திவிழாவின் ஆரம்பதினமாகிய இம்மாதம 23-ந்திகதியன்று ஞாபகார்த்த தபால்முத்திரைகளைப் பாவனைக்குவிடுதற்காக ஒழுங்குகளும் செய்யப்பட்டிருக்கின்றன.

### விடுமுறைநாட்களில் மாற்றம்

கிறிஸ்மஸ்-புதுவருட விடுமுறைநாட்களை இரண்டிலிருந்து ஏழாக அதிகரிக்கச்செய்யும் விஷயமாய் மந்திரிசபை இன்றுதினம் ஆலோசிக்க விருக்கின்றது. ஆனால். இந்தஆலோசனையாலே மேதினம் (வைகாசி 1) உட்படத் தற்போதுள்ள 26 விடுமுறைநாட்களின் தொகை அதிகரிக்கமாட்டாது. ஞாயிற்றுக்கிழமையிலே அரசாங்கவிடுமுறைநாட்கள் வரும்போது விடுமுறைநாட்கள் கொடாமலே விடுமுறைநாட்களைத் திருத்திச் சமஞ்செய்ய அரசாங்கம் திட்டமிடுகின்றது. தற்போதுள்ள வழக்கப்படி, ஞாயிற்றுக்கிழமையில் அரசாங்கவிடுமுறைநாள் வருமிடத்து மறுநாளொன்று விடுமுறைநாள் கொடுக்கப்படுகிறது. சராசரியாக வருடந்தோறும் மூன்றுஅல்லது நான்கு அரசாங்க விடுமுறைநாட்கள் ஞாயிற்றுக்கிழமையிலே வருகின்றன. ஞாயிற்றுக்கிழமையில்வருகின்ற இந்த அரசாங்க விடுமுறைநாட்களை மறுநாள் விடுமுறைநாள் ஆக்காமலும், ஈஸ்றர்—சிங்கள, தமிழ் விடுமுறைநாட்களிலே இரண்டொருதினங்களைக் குறைத்தும் கிறிஸ்மஸ்-புதுவருட விடுமுறைநாட்களை அதிகரிக்கச்செய்ய வேண்டுமென்று ஆலோசனைகூறப்படுகிறது. அதற்குக்காரணம், சிங்கள- தமிழ் வருடப்பிறப்பு விடுமுறைநாட்களை அதிகமானோர் மலைநாடுகளுக்குச் சென்று சந்தோஷமாகச் செலவிடாமையும், கிறிஸ்மஸ் - புதுவருட விடுமுறைநாட்களையே அதிகமானோர் சமயபேதம்பாராது சந்தோஷமாகக் கழிக்க ஆசிப்பதுமேயாகும்.

### ஆலங்கட்டி மழை

சென்ற 27-4-56 வெள்ளிக்கிழமை காலை பெரும்இடிமுழக்கத்துடன் பெய்த மழையின்போது போளவத்தைஆலயத்தையடுத்த அங்கம்பிட்டி, கோனுவில், தங்கொட்டுவா, மிரிசங்கொட்டுவா, நயினமடம்ஆகியாம் கிராமங்களிலே மழையுடன் பெரியபனிக்கட்டிகளும் விழத்தொடங்கிவிட்டன. பலர் இதைப் பொருட்படுத்தாதபோதிலும் திருக்குடும்ப கன்னியர் தமிழ்ப்பாடசாலையில் படித்துக் கொண்டிருந்த மாணவிகளுட்சிலர் மிகுந்த உற்சாகத்துடன் குடைகளைப் பிடித்துக்கொண்டும், கற்பலகையால் தங்கள்தலையை மறைத்துக்கொண்டும் பனிக்கட்டிகளைச் சேகரித்தவண்ணமிருந்தனர் கிராமத்தின் சிலஇடங்கள் முழக்கத்தினல் பாதிக்கப்பட்டன.

---


### கிறீஸ்தவ போதகச்சுருக்கமாகிய பெரிய குறிப்பிடம்

யாழ்ப்பாண மேற்றிராசனத்திற்குட்பட்ட சகல கோவில்களிலும், பள்ளிக்கூடங்களிலும் (மேல்வகுப்பு மாணவர்க்கு) உபயோகிக்கப்படவேண்டுமென்று நம்மேற்றிராணியாண்டவரால் அங்கீகரிக்கப்பட்ட இச்சமயபாடபுத்தகம் விசுவாசப்பிரமாணம், கிறிஸ்தவ ஒழுக்கம், கிறிஸ்தவ வழிபாடு என மூன்றுகாண்டங்களாக வகுக்கப்பட்டு நவீனமுறையில் அழகிய பதிப்பில் வெளிவந்துள்ளது.

**பிரதிவிலை ருபா 1-75.**

தபாற்செலவு பிரத்தியேகம்

மனேஜர்,

அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மனிதன் அப்பத்தினல் மாத்திரமல்ல..."

( சி. எஸ். நாயகம், ஸ்ரேஷன்மாஸ்றர், கெம்பாஸ் — மலாயா )

(முன்தொடர்ச்சி)

கடைசியாக, நாலாம்வகுப்பைச் சேர்ந்தவர்கள்யார்? இவர்கள்தான் குருவானவர் தமதுபிரசங்கத்தில் விதைக்கும்விதைகளெல்லாம்முளைத்து வளர்ந்து 30—60—100 மடங்கு நற்பலனைக் கொடுக்கும்படியாகத் தங்கள் இருதயங்களைப் போதியளவாகப் பயன்படுத்திக்கொண்டு கோவிலுக்குப் போகிறவர்கள். இவர்கள்தான் சிறந்தபாக்கியவாளர்கள். இவர்கள்தான் என்றும் பசிபட்டினியால் வாடாதோராது தேவவாக்கியங்களை — ஜீவியவார்த்தைகளை நிறைவாகத் தங்கள்உள்ளத்தே— தங்கள்ஆத்துமத்திலே கொண்டிருப்பவர்கள். இவர்களுக்கு ஒருபோதும் ஞானப்பசியு மிராது. ஞானத்தாகமுமிராது. எப்போதும் நிறைஞானச்செல்வராய், சிரஞ்சீவியர்களாயிருந்து பாக்கியமாகமரித்துச் ஜீவியவார்த்தைகளைத் தமதுகுருமார்மூலம் விதைத்த திவ்வியகர்த்தருடன் நித்தியமாய்வாழ்திக்க மோட்சமாநகர்போய்ச் சேர்வோராவர். ஆகவே, இவற்றில் நீங்கள் எவ்வகுப்பைச் சேர்ந்தவர்கள்? இனி மேல்நீங்கள் எந்தவகுப்பைச் சேர விரும்புகிறீர்கள்?

நிற்க, இவ்வித குறைபாடுகளுக்கெல்லாம் பொதுவிலே விசுவாசிகள்சொல்லும் நியாயமென்ன? "சுவாமியார் சொல்வதொன்றும் எங்களுக்குப் புரியவில்லை; அவருடைய பிரசங்கம் இதமாயிருந்தால் எவரும் ஏன்வெளியிலேபோகிறார்கள்? இவ்விதம் பாகண்டிதமாய் ஏன்நடக்கிறார்கள்?" என்பதே. ஆனால், குருமார்எல்லாரும் போனபிரசங்கிகளாய், வாசாலகலங்கார பிரசங்கிகளாயி இருக்கமுடியுமா? ஓர்குருவானவர் பிரசங்கஞ் செய்யும்போது அவாலப்பேசுவது, ஆனால், திவ்வியஇஸ்பிரீத்துசாந்து சர்வேசுரனே அவர்வாயால் பேசுகிறார். "அதேதெனில், பேசுகிறவர் குருவானவரல்ல, உங்கள்பிதாவின் இஸ்பிரீத்துவானவரே அவர்உள்ளத்திலிருந்து பேசுகிறார்" (மத். 10: 20.) என்பது கர்த்தரின் திருவாக்காகும். ஆகவே, நாம் குருவானவரில் பிழை பிடிப்பது இஸ்பிரீத்துசாந்து சர்வேசுரனிலேயே பிழைபிடிப்பதுபோலாகும்.

அவ்வாறுயின் இது தேவநிந்தைஎன்னும் பாவத்தைச்சாரும். "மனிதருக்கு எவ்விதபாவங்களும் மன்னிக்கப்படும்; ஆனால், இஸ்பிரீத்துசாந்துவுக்கு விரோதமாய்ப் பேசுகிறவர்களுக்கோ இம்மையிலும், மறுமையிலும் மன்னிப்பென்பது கிடையாது" (மத். 12:32.) என்று கிறிஸ்துநாதர் தெள்ளத்தெளிவாய்த் தெரிவித்திருக்கிறார். எனவே, இவ்விஷயமாய் நாம் குருமாரில் குற்றம்பிடித்துப் போக்குச்சொல்லித்தப்ப இடமில்லை. அதனால் நமக்குப் பிடித்ததோ, பிடிக்கவில்லையோ, அவர்களின் பிரசங்கத்தை நாம் ஆர்வத்துடன் ஆறஅமரவிருந்து காதாரக் கேட்டே தீரவேண்டும். ஏனெனில், இது தேவகட்டளை. (மாற். 16: 15.) அன்றியும் கேட்டதை நமது தினசரி வாழ்க்கையில் நடைமுறைக்குக்கொண்டுவருதலும் அவசியம். அப்போதுதான் ஒன்றுக்கு நூறுக நற்பலனைப் பெறுவோம். பிரசங்கத்தின் கனகாத்திரத்தை நாம்சரிவரஉணர்வோமானல் ஓர்போதுமே அதன் ஞானப்பிரயோசனத்தை நாம்அடையாமல் விடோம். அர்ச். அகுஸ்தீனர் பாவச்சகதியில் உழன்றுதிரிந்த காலத்திலே அவரை மனந்திருப்பிப் பேரான ஓர்அர்ச்சியசிட்டராக்கியது, அவர்கேட்ட அர்ச். அமிர்தநாதரின் பிரசங்கமும், அவர் வாசித்த வேதாகமவாக்கியங்களுமே. ஞானபோதகத்தின் கனகாத்திரத்தையும், அதைக்கேட்பதினல் விசுவாசிகள் அடையும் ஞானப்பிரயோசனத்தையும் கண்டபிசாசு மனப்புழுக்கங்கொண்டு அதைக்கேளாதபடி ஆத்துமாக்களைக்கெடுக்க என்னென்னசூழ்ச்சியெல்லாம் எடுக்கிறதென்பதற்குப் பின்வரும்சம்பவம் போதியசான்றுகும்.

ஒருநாள் ஓர்அர்ச்சியசிட்டவர் ஞாயிற்றுக்கிழமைப் பூசைவேளையிலே சர்க்கரைப்பந்தரில்தேன்மாரிபொழிந்தவாறுய் ஞானமிர்தமான ஓர்பிரசங்கம் செய்துகொண்டிருந்தார். கோவிலில் குழுமியிருந்த மக்களெல்லாம் காந்தத்தால்இழுபட்ட ஊசியைப் போன்று அவரின் பிரசங்கத்தைக்கேட்டு மெய்மறந்தவர்களாய்க் கற்சிலைகள் போல வைத்தகண்எடுக்காமல் பிரசங்கியாரிலேயே கருத்தாயிருந்தார்கள். அப்பொழுது திடீரென நவீன அழகுபூண்ட ஓர்நூதனஸ்திரீ தன்னைச் சிங்காரித்துக்கொண்டு கோவிலுள் நுழைந்து ஆளோடாளாய் அவர்கள்நடுவில்அமர்ந்தாள். அவளுடைய நூதனஅழகை நோக்கியதும் அங்கிருந்தவர்களின் கண்களும், கருத்தும் குருவானவரின் பிரசங்கத்திலல்ல, அவளிலேயே முற்றுகச்சென்றன.

அப்பொழுது குருவானவர் என்னதான்சொல்லியும் அவர்களை வசப்படுத்துவது இயலாக்கருமமாயிற்று. உடனே அந்தப்பரிசுத்த குருவானவர் அந்த நூதன சிங்காரியை நோக்கி: "நரகக்கூளியே, ஆண்டவரின் நாமத்தினல் நான்உனக்குக் கட்டளையிடுகிறேன்; நீ இந்தக்ஷணமே இந்தஇடத்தைவிட்டு உன்னிடத்திற்குப் போய்விடு" என்று சிலுவைவரைந்து சொன்னதுசொல்லாமுன்னரே பிரசங்கத்தைஅவர்கள் கேளாதபடி குழப்பும்படியாக அந்த ஸ்திரீவேஷம்தரித்து அங்குவந்த நரகப்பிசாசு அலறிக்கொண்டோடி மாயமாய் மறைந்தது. பிரசங்கம் கேட்பதினல்வரும் ஞானப்பிரயோசனத்தையும், அதனல் பிசாசுக்கிருக்கும் மனோவேதனை —மனப்புழுக்கத்தையும், அதனல் அதுஎடுக்கும் சூழ்ச்சிகளையும் பார்த்தீர்களா? இவ்விதசூழ்ச்சிகளில் சிலதான் நாம்ஏற்கனவே குறிப்பிட்டபடி பிரசங்கநேரத்தில் வெளியேசெல்வதும், பராக்காயிருப்பதும், காதுக்குள் பேசிக்கொள்வதும், தூக்கங்கொள்வதுமாகும்.

நிற்க, பிரசங்கவேளை ஓர்குருவானவரின் வாயினின்றுவரும் வார்த்தைகளெல்லாம் வீண்பதர்களல்ல. அப்படியென்ன அவர்விதைக்கும் — போதிக்கும் வார்த்தைகளுள் ஓர்நல்ல மணிப்பிடியான வார்த்தை இருக்கமாட்டாதா? அந்தஒரேயொருவார்த்தை — நல்விதையே நமதுஇருதயத்தில் ஆழமாய்விழுந்தால் அதுவே ஒன்றுக்கு 30— 60— 100 மடங்கு நற்பலனைத் தரப்போதியதாகுமே. இவ்விதம் ஒரே விதையைக்கொண்டு — ஒரேவேதவாக்கியத்தைக்கொண்டுமனந்திரும்பி அர்ச்சியசிட்டர்களானோர் அநேகர். இன்று பரலோகஇராச்சியத்திலுள்ள அத்தனைமோட்சவாசிகளும் அர்ச்சியசிட்டர்களாய்ப் பிறந்தவர்களல்ல. புத்திபிரசங்கங்களைக்கேட்டும், வேதாகமங்களைவாசித்தும் தங்களைத்திருத்தி அர்ச்சியசிட்டதனத்தில் வளர்ந்து மோட்சத்தைச் சுதந்தரித்துக்கொண்டார்கள். ஆகவே நாமும் அவர்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி மோட்சத்தில் அவர்களுடன்ஒன்றித்து நித்தியானந்தராய்வாழ வருந்துவோமாக! சுபம்.

# மனைவியின் பொறுமை அவசியமா?

தென்றல்வீசியவாழ்க்கையிலே புயல் வீசுகின்றது. ஏன்? ஒற்றுமைநிலவிய வாழ்க்கையிலே வேற்றுமை தலைவிரித்தாடுகிறது. ஏன்? இவ்வினக்களுக்குத் தகுந்தவிடைகளை இங்கேநாம் அறிந்துகொள்வது அவசியமாகும்.

"வாழ்க்கையின்வெற்றிக்கு முக்கியமாய் உதவுகிறவள் மனைவியே. வாழ்க்கையில் முக்கியஸ்தானத்தை அவளே வகிக்கிருள்" எனக் கூறுகின்றூர் மேல்நாட்டு அறிஞர்ஒருவர். நாம குடும்ப வாழ்க்கைகளைக் கவனிப்போமானல் இதன்உண்மை நன்கு புலப்படும். "ஒருகுடும்பத்தின் வெற்றிக்கும், தோல்விக்கும் காரணமாயிருப்பவள் மனைவியே" என்று கூறுகின்றூர் மற்றோர்அறிஞர். இதனையும் அறிவுக்கண்கொண்டு நோக்குவோமானல், "இலைமறை காய்" போன்று இதில் மறைந்துகிடக்கும் உண்மையை இலகுவில் அறிந்துகொள்ளலாம்.

இல்லறவாழ்க்கையில் முக்கியஸ்தானத்தை வகிப்பவளாகியபெண் இல்லறவாழ்க்கையின் வெற்றிக்குக் கையாளவேண்டியன எவை? இவைகள் பலவாயினும் அவற்றுள் பொறுமையே முக்கியஸ்தானத்தை வகிக்கின்றது. பொறுமைஎன்னும் பொன்னான குணம் ஓர்பெண்ணின்உள்ளத்திலே இடம் பெறுவிட்டால் வாழ்க்கையிலே வீசிக்கொண்டிருக்கும் இனிய தென்றல் குடும்பங்களின் சீரைக் கெடுத்துப் புயலாகமாறிவிடும். வாழ்க்கையிலே நிலவிய ஒற்றுமைமறைய அதனிடமாக வேற்றுமையே தனியாட்சிபுரியும். ஆகவே, மனைவி ஒருபோதுமே பொறுமையை இழந்துவிடக்கூடாது.

ஒருகுடும்பத்தில் கணவன் விரைவிலே பொறுமையை இழந்துவிடுகிறான். அதனல், மனைவிக்கு எவ்வளவோகஷ்டங்கள் நேர்கின்றன. குடும்பசேமத்தை உத்தேசித்து அவற்றையெல்லாம் அவள் சகித்துக்கொள்ளுகிறுள். ஆனல், நல்லமனைவி — புத்திசாலியானமனைவி கணவனுக்குக் கோபம்வாராதமுறையில் நடந்துகொள்ளுவாள். அவ்விதம்நடப்பது மிகஅவசியமாகும். புருஷனுடன் ஏட்டிக்குப்போட்டியாகக் கோபங்கொள்வதால் பயனில்லைஎன்பதை மறக்கலாகாது. சாதாரணமாகப் பெண்களைக் கவனிப்போமானல், அவர்கள் விரைவில் கோபங்கொள்வதில்லை. ஏனெனில், அவர்களின்மனதில் பொறுமை ஆட்சிசெலுத்துகின்றது.

ஆனல், எத்தனையோபெண்கள் இதற்கு மாருயும் இருக்கின்றூர்கள். கணவன் ஒன்றுசொல்வதற்குமுன் மனைவி பத்து அடுக்கிவிடுகின்றுள். இவ்விதம்பேசுவது கணவனின்கோபத்தைக் கொடூரமாக்கிக் குடும்பபிளவுக்கும் வழிதேடிவிடுமன்றோ!

இவ்வாறு நான்வரைவதாலே மனைவி மாத்திரம் பொறுமைஉணர்ச்சி உள்ளவளாயிருக்கவேண்டும்; கணவன் அவ்வாறு இருக்கவேண்டியதில்லையென்று நான் கருதுகிறேனென எவரும் பிழையாக நினைக்கப்படாது. ஆண், பெண் இருவரும் பொறுமைஉணர்ச்சி உடையவர்களாய் இல்லறவாழ்க்கையை இதயக்களிப்புடன் நடத்துவார்களேயானல் வாழ்க்கையில் வெற்றியடைவதன்றித் தோல்விஅடையார். ஆனல், இவ்விதகுடும்பங்களை நாம் காண்பதுஅரிது. எனவே, மனைவி கணவனிலும்பார்க்கப் பொறுமைவழியைக் கடைப்பிடிப்பது சாலச்சிறந்தது. ஆண் பொறுமையுள்ளவனும், பெண் பொறுமையற்றவளுமாக உள்ளஒரு குடும்பம் மகத்தான வெற்றியடைவது அரிதே. ஆனல், பெண் பொறுமையுள்ளவளும், ஆண் பொறுமையற்றவனுமாக உள்ளஒருகுடும்பம் வெற்றிஈட்டும்என்பதில் ஐயமில்லை. ஆகையால், "பொறுத்தால் பூமியாளலாம்" என்ற முதுமொழிக்கிணங்க மனைவி பொறுமையுடன் வாழ்க்கைநடத்துவாளானல், அவர்களின்வாழ்வில் மணம் வீசும்.

இல்லறவாழ்க்கையில் ஒன்றில் கணவனே அல்லது மனைவியோ பொறுமையின்றிக் காரியங்களைச்செய்ய முற்பட்டால், என்னநடக்குமென்று சொல்ல வேண்டியதில்லை. தம்பதிகளுள் வீண்வாக்குவாதங்களும், சச்சரவுகளும் முளைத்து இல்லத்தில்நிலவும் அமைதியையும், சந்தோஷ சூழ்நிலையையும் கெடுக்குமன்றோ! இவ்விதம் அடிக்கடி மனஸ்தாபப்படும் தம்பதிகளுக்குள் நாளடைவில் விரோதமும், குரோதமும் வளர்ந்து, இல்லறஇன்பத்துக்கு நிரந்தரஇடையூறுக அமைந்துவிடுகின்றன. ஆனல், குடும்பவாழ்க்கையைப் பொறுத்த ஒவ்வொருகருமத்திலும் தம்பதிகள்இருவரும் பொறுமையுடன் கலந்தாலோசித்து, ஒத்துழைத்தால் கருமங்கள் எளிதில் நிறைவேறுவதுடன் குடும்பத்தில் ஒற்றுமையும் பலப்படும்.

— S. T.

---

● அயர்லாந்திலிருந்து சென்ற 1955-ம் ஆண்டிலே 700 கத்தோலிக்க மிஷனரிமார் பிறநாடுகளுக்கு அனுப்பி வைக்கப் பட்டிருக்கின்றனர். இவர்களிலே மிகப்பெரியகுருமார்குழுவாக ஆபிரிக்கமிஷன்கள் சபையைச்சேர்ந்த 63 குருமார் ஆபிரிக்கமிஷன் நாடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட் டிருக்கின்றனர்.

● ஐக்கியநாடுகளின் ஸ்தாபன பிரதமகாரியதரிசியாகிய திரு. டாய்க் ஹம்மார்ஸ்க்ஜோயெல் அவர்கள் இஸ்ரூயேல் — அராபிய நாடுகளிடையே உக்கிரங்கொண்டிருக்கும் பகையைத்தீர்க்க முயற்சிக்குமாறு ஐக்கிய அமெரிக்க தேசத்திலிருந்து செல்லும்வழியிலே பரிசுத்தபாப்பரசரின் பிரத்தியேகபேட்டி பெற்று அவருடன் இருபதுநிமிஷம் செலவிடலாயினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### போலாந்தில் மரியாயின்வருடம்

போலாந்தின் அதிமேற்றிராணிமார், மேற்றிராணிமார்களின் ஆஞ்ஞைப்படியே அத்தேசம் நிகழும்வைகாசிமாதம் 3-ந்திகதியாகிய இன்றுதினம்ஆரம்பமாகி அடுத்துநிகழும் 1957-ம் ஆண்டுவைகாசிமாதம் 3-ந்திகதியன்றுநிறைவாகும் மரியன்னையின் வருடம்ஒன்றைக் கொண்டாடவிருக்கின்றது. போலாந்தின் அரசியாகப் பரிசுத்ததேவதாயாரைக் கசிமிர்அரசர் பிரகடனஞ்செய்த 300-ம் ஆண்டு நிறைவுவிழாவை இது ஞாபகப்படுத்துவதாகும். இதுசம்பந்தமான திருவைபவங்களெல்லாம் கோவில்களில்மாத்திரம் நடந்தேறும். இன்னும்பத்துவருடகாலத்தில் போலாந்துமனந்திரும்பிய ஆயிரமாம்ஆண்டு நிறைவுவிழா வருகின்றது.

### கண்ணீர்சிந்திய மாதாசுரூபம்

இத்தாலியின் தென்பாகத்திலுள்ள சிசிலிதீவிலே சைறாக்குஸ்நகரில் இற்றைக்குமூன்றுவருடங்களின்முன் நான்குதினங்களாய்த் தொடர்ந்துஅற்புதமாகக் கண்ணீர்சிந்தியழுத மாதாசுரூபத்தை ஸ்தாபிப்பதற்கென்று அங்கு கட்டியெழுப்பப்படவிருக்கும் ஆலயமாதிரியை நிர்மாணிக்கும் போட்டியிலே 36 நாடுகளைச்சேர்ந்த 580 சிற்பிகள் ஈடுபட்டிருக்கின்றார்கள். இவர்களில்ஆறுபேர் இரும்புத்திரைக்குப்பின்னுலுள்ள நாடுகளைச் சேர்ந்தவர்கள். அதாவது மூவர் கிழக்குஜேர்மனியிலும், இருவர் யூகோசிலேவியாவிலும், ஒருவர் செக்கோசிலவக்கியாவிலும் வசிக்கின்றனர். 51 சிற்பிகள் ஐக்கியஅமெரிக்க தேசத்தைச் சேர்ந்தவர்கள். இந்தஆலயம் 20,000 பேருக்குப் போதியஇடவசதியுள்ளதாக இருக்கும். அத்துடன் யாத்திரிகர்க்கான புகலிடங்களையும், நிர்வாகஸ்தருக்கான காரியாலயங்களையும் கொண்டிருக்கும்.

### லூர்துபதிப் புதியகோவில்

லூர்துதிருப்பதியிலே திருக்கெபிக்குச்சமீபமாய் நிலத்தின்கீழ் ஓர்கோவிலைக் கட்டியெழுப்பும் செலவிற்கென்று பரிசுத்த பாப்பரசர் லூர்துபதியின் தியாஸ் மேற்றிராணியாருக்கு 25,000 ரூபா அனுப்பிவைத்திருக்கின்றார். இந்தக்கோவில் அர்ச். பத்தாம்பத்திநாதர் பேரால் கட்டப்பெற்று 20,000 பேரைக் கொள்ளக்கூடியதாயிருக்கும். இதற்கென்று உலகமுழுவதிலுமுள்ள லூர்துபதி யாத்திரிகர்கள் நன்கொடைகள் அனுப்பி வைப்பார்களெனப் பாப்பரசர் விருப்புத்தெரிவித்திருக்கின்றார். இக்கோவிலுக்கானதிட்டம் பரீஸ்நகர் அதிமேற்றிராணியாரான கருதினல் பெல்தின்ஆண்டவர் தலைமையில்கூடிய யாத்திரைத்தலைவர்களாலும், லூர்துபதியின் பிரதமசிற்பியான எம். வாகோஅவர்களாலும் அங்கீகரிக்கப் பட்டுள்ளது.

### மிஷன்ஆஸ்பத்திரிக்குப் பாராட்டுரை

சென்னைநகரிலே சென்றசித்திரைமாதம் 21-ந்திகதியன்று சென்னைமுதன்மந்திரியும், சுகாதாரமந்திரியும் சமூகமாயிருந்த ஓர்கூட்டத்தில் டக்றர் பி. வரதராஜலு நாயுடுஅவர்கள் பேசியபோது பின்வருமாறு கூறினர்: “பொதுமக்கள் அரசாங்கத்தால் நடத்தப்படும ஆஸ்பத்திரிகளைக்காட்டிலும் மிஷனரிமாரால் நடத்தப்படும் ஆஸ்பத்திரிகளையே விரும்புகின்றார்கள். ஏனெனில், அரசாங்கஆஸ்பத்திரிகளை நிர்வகித்து வருகிறவர்கள் வியாதிஸ்தர்களை நல்லவிதமாக நடத்துவதில்லை. அரசாங்க ஆஸ்பத்திரிகளின் நிர்வாகஸ்தர்கள் — நேர்ஸ்மாருமு, டக்றர்மாரும்உட்பட — பிரசவத்திற்கு வரும் ஏழைப்பெண்கள் விஷயமாகத்தானும் இரக்கசிந்தையுடன் நடந்துகொள்வதில்லை; ஆஸ்பத்திரிகளைக் கூட்டிப் பெருக்குகிறவர்கள்பெண்களுடன் சுடுமூஞ்சித்தனமாகப் பேசுவதையும், அவர்களை ஏசுவதையும்

திரியாகத் தெரியப்பெற்றுரெனினும் கப்புச்சின் சபையில் சேர்வதற்காக உடனேதானே அப்பதவியை இராசிநாமாச்செய்துவிட்டார்.

### ஆர்ஜென்ரீன முன்னுள்மந்திரியார்

ஆர்ஜென்ரீனுவிலே ஜெனறல்பெரேன் ஜனுதிபதியின் ஆட்சிகாலத்திலே அவரது வெளிநாட்டுமந்திரியாய் இருந்தவரான செஞ்ஞோர்ஜெரேனிமோ றெமோறினோ என்பவரைச் சென்றவருட ஆனிமாதம் பரிசுத்தஸ்தானம் திருச்சபையிலிருந்துவிலக்கிவைக்கலாயிற்று. தற்போது இந்தவிலக்கு நீக்கப்பட்டு அவர்மீளவும் திருச்சபையில் சேர்க்கப்பெற்றிருக்கின்றார். அப்போதுபெரேனின் வேதவிரோத ஆட்சிகாலத்தில் பெயர்கள்குறிப்பிடாமலேஅநேகர் திருச்சபையிலிருந்து விலக்கப்பட்டார்கள். இந்தவிலக்கினுல் அங்கே திருச்சபையின் உரிமைகளை அவமதித்தவர்களும், குருமார் தங்கள்கடமைகளை நிறைவேற்றுது தடுத்தவர்களுமான சகலருமே திருச்சபைக்குப் புறம்பாகத் தள்ளுண்டார்கள். செஞ்ஞோர் றெமோறினோஅவர்கள் தற்போது பிரான்சிலே வசிக்கின்றார். அங்கேயேஇவர் திருச்

## கத்தோலிக்க சமாச்சாரம்

நானே பார்த்திருக்கிறேன். வியாதிஸ்தர்களுக்கு மருந்தைவிட மிகவும்அவசியமாயிருப்பன அன்பும், அனுதாபமுமே. இதனை டக்றர்மாரும், ஆஸ்பத்திரிகளில் கடமைபார்க்கிறவர்களும் அறிந்துகொள்ள வேண்டும்”

### நிதிமந்திரியின் குருபதவி

இற்றைக்கு ஐந்து வருடங்களுக்குமுன் மோல்த்தா அரசாங்கத்தின் நிதிமந்திரியாய் இருந்தவரான திரு. ஆர்தர் கலம்போ அவர்கள் இன்று ஆஸ்திரேலியாவிலே சிட்னிநகருக்குச் சமீபமானலீச்சாட் எனுமிடத்திலுள்ள ஆச்சிரமம்ஒன்றிலே வண. பேர்டினன்ட்சுவாமியார் எனும் நாமத்துடன் ஓர்கப்புச்சின் சபைக் குருவாயிருக்கின்றார். அந்த ஆச்சிரமத்திலே இவர் சாதாரண அங்கத்தவரைக்காட்டிலும் அதிகம்பயன்படக்கூடிய ஒருவராய் இருக்கின்றார். ஏனெனில், இவர் மோல்த்தாவின் ரோயல்சர்வகலாசாலையிலே எம். டி. எனும் வைத்தியபட்டம்பெற்றவர். இப்பட்டம் பெற்றபின் இவர் அரசியற்துறையில் பிரவேசித்துத் தொழிற்கட்சியிற் சேர்ந்து, கடைசியாக நிதிமந்திரியாக நியமனம்பெற்றுர். 1950-ம் ஆண்டு இவர் திரும்பவும் நிதிமந்

சபையுடன் சமாதானஞ்செய்துகொண்டார்.

### பாத்திமா பிள்ளைகளின் தாயார்

பாத்திமாபதியிலே தேவதாயாரின்காட்சிபெற்ற பிள்ளைகள்மூவரில் இருவரின் தாயாரான திருமதி ஒலிம்பியா தே ஜீசஸ் மாட்ரோ அம்மையார் தனது 86-ம் வயதிலே அல்ஜஸ்றெல் எனும்கிராமத்தில் சமீபத்திலே காலஞ்செல்லலாயினர். இந்த அம்மையாரின் பிள்ளைகளான பிரான்சீஸ்கோ, ஜாசிந்தாஎனும் இருவருக்கும் தேவதாயார் ஆறுமுறை காட்சியளிக்கலாயினர். இப்பிள்ளைகள் இருவரும் ஏற்கனவே இறந்து, புதிய பாத்தியாமகாலயத்துப் பெரியபலிபீடத்தின் இருமருங்கிலுமுள்ள சிற்றாலயங்களில் அடக்கஞ்செய்யப் பட்டிருக்கிறார்கள். காட்சிகள்பெற்ற மறுபிள்ளையும், இவர்களின் மைத்துனியுமான லூசியா டொஸ்சான்ரோஸ் தற்போது கொயிம்பிறுவிலே ஓர்கார்மேல் சபைக் கன்னியாஸ்திரியாய் இருந்துவருகின்றாள். “செபமும், தபமும் செய்யவேண்டுமென்ற நமதுவேண்டுகோள்கள் நிறைவேற்றப்படுமாயின் ருஷியா மனந்திரும்பும்; சமாதானம் உண்டாகும்” என்று பரிசுத்ததேவதாயார் இப்பிள்ளைகளுக்கு உறுதிவாக்களித்தார். காலஞ்சென்ற திருமதி மாட்ரோஅம்மையார் பல்லாயிரக்கணக்கான யாத்திரிகர்களைச் சந்தித்திருக்கிறாள். இவளுடையநாயகரான திரு. மனுவேல் பீட்றோ மாட்ரோவும், இவர்களின் ஏழுபிள்ளைகளில் இருவரும் இன்னமும் சீவந்தராய் இருக்கின்றார்கள். திருமதி மாட்ரோஅம்மையாரின் பேரப்பிள்ளைகளில் நால்வர் குருப்பட்டத்துக்குப் படித்துவருகின்றார்கள். லேய்றியாவின் டா சில்வா மேற்றிராணியார் அல்ஜஸ்றெல் கிராமத்திலுள்ள குடிசையில் துக்கப்பாடற்பூசை நிறைவேற்றினர். அங்கே இவள் நாயகர் நோய்வாய்ப்பட்டிருந்துவருகிறார். பாத்திமா சேமக்காலையிலே இவள்பிரேதம் அடக்கஞ்செய்யப் பட்டிருக்கிறது.

### லத்தறன் உடன்படிக்கை

1929-ம் ஆண்டு இத்தாலிய அரசாங்கத்துக்கும், பரிசுத்தஸ்தானத்துக்குமிடையே லத்தறன்உடன்படிக்கை நிறைவேறுமாறு சிஞ்ஞோர்முசோலினிக்கும், வத்திக்கானுக்கும் இடைநின்று சமரசப்பேச்சுகளை வெற்றிகரமாக ஆரம்பித்து நடத்தியவரான யேசுசபையைச் சேர்ந்த வண. பியெற்றோ வெந்தூறிசுவாமியார்சென்றபங்குனி மாதம் 18-ந்திகதியன்று தமது 95-ம்வயதில் காலஞ்செல்லலாயினர். முன்புஇவர் யேசுசபைக் காரியதரிசிஜெனறலாய் இருந்தவர். 1931-ம்ஆண்டு இத்தாலிய அரசாங்கத்துக்கும், திருச்சபைக்குமிடையே கத்தோலிக்க சேவா இயக்கத்தைமுன்னிட்டு எழுந்தபிணக்கைச்சமரசமாகத் தீர்த்துவைப்பதிலும் இவர் முதன்மை வகித்திருந்தார்.

### மகளைப்பின்பற்றிய குடும்பம்

இங்கிலாந்திலே பெக்ஸ்ஹில் நகர்வாசியான செல்வி எம். பிளண்ட் எனும் பெண்பிள்ளை இற்றைக்குமூன்றுவருடங்களின்முன் மனந்திரும்பிக் கத்தோலிக்கதிருமறையில் சேர்ந்துகொண்டாள். அடுத்தவருடம் ஓர்அங்கிளிக்கன்சபைப் பாதிரியாரான அவளுடையசகோதரன் திரு. ஏ. பிளண்ட்அவர்கள் தமதுமனைவியுடனும், இருபிள்ளைகளுடனும் மனந்திரும்பிக் கத்தோலிக்க திருமறையில் சேர்ந்துகொண்டார். இப்போது முழுக்குடும்பமுமே ஓர்கத்தோலிக்கக்குடும்பமாய் விளங்குகின்றது. இருவரதும் பெற்றோர் அன்றுதிங்கட்கிழமை பெக்ஸ்ஹில்நகரிலுள்ள அர்ச். மரியமதலேனுள்கோவில் விசாரணைப்பங்குக் குருவரான வண. பி. ஜி. போர்டே சுவாமியாரால் கத்தோலிக்கதிருமறையில் சேர்க்கப்பெற்றிருக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வைகாசி மாதம்

**பொதுக்கருத்து:** பரிசுத்தகன்னி மரியம்மாள் அரசியென்ற மெய்யுணர்ச்சி மக்களிடையே ஒற்றுமைபயக்க வேண்டுமென வேண்டிக்கொள்வது.

**மிஷன் கருத்து:** பரிசுத்தகன்னி மரியம்மாளின்பக்தி அவிசுவாசிகளை மெய்மறைக்கு இழுக்க வேண்டுமென மன்றாடிக்கொள்வது.

சத்தியவேத
**பாதுகாவலன்**

1956-ம் ஆண்டு
வைகாசிமாதம் 3-ந்திகதி

## வந்ததே வணக்கமாசம்

மாதாவின் வணக்கமாசமாகிய வைகாசிமாசம் வந்தது. தங்கள் அன்புக்குப்பாத்திரமான பரமநாயகியை அவருடைய ஞானமக்களெல்லாம் வாயாரப் போற்றி, மனதார வாழ்த்தித் தங்களுக்குவேண்டிய இகபர நன்மைகளை விசேஷவிதமாய் இரந்துகொள்ளுமாறு ஆவலுடன் எதிர்பார்த்த வணக்க மாசம் பிறந்தது. பூலோகமாகிய இக்கண்ணீர்க் கணவாயிலே வாழ்கின்ற நாமெல்லாம் எமது ஆபத்து அவசரங்களில் பரலோகத்தை ஏறெடுத்து, கிருபை தயாபத்துக்கு மாதாவாகிய எங்கள் இராக்கினியே, எங்கள் சீவமே, எங்கள் மதுரமே, எங்கள் தஞ்சமேயென்று அபயமிட்டு உதவிக்குஓடிப்போகின்ற மாதாவின் வணக்கமாசம் உதயமாகியது. சூரியனின் உதயத்தாலே தாமரைகள் மலர்வது போன்று, மாதாவின்வணக்க மாச உதயத்தாலே நமது இருதயகமலமும் மலரவேண்டியது. இவ்வசந்தகாலப் புஷ்பங்களைப் போல் நாமும் எமது இருதயங்களை மலரச்செய்து, இயற்கைப் புஷ்பங்களுடன் எமது இருதய புஷ்பங்களையும் மாதாவின் பாதாரவிந்தங்களிலே சாத்த வேண்டியது. தமது வணக்க மாசத்திலே தேவதாயார் தம்முடையபிள்ளைகளை விசேஷ கிருபைக்கண்கொண்டு நோக்குகின்றார். அன்று கல்வாரிமலையிலே தமதுதிருக்குமாரனின் சிலுவையடியில் தமது பிள்ளைகளாகப் பெற்றெடுத்த மனுமக்கள்மேல் அவர் விசேஷகருணை கொள்ளுகின்றார். தமதுமக்கள் தம்மை அதிகமாக நாடிவரும்போதும், தம்மைப் பாடித் துதிக்கும் போதும் அவர்கள்மேல்மிகுந்த அன்புகூருகின்றார். இதோ இன்றுமுதல் எல்லாத்தலைமுறைகளும் என்னைப் பாக்கியவதியெனப் புகழ்ந்துகொண்டாடுமென்ற அந்தத்திருவாக்கு நிறைவேறுவதைக்கண்டு ஆனந்திக்கின்றார். வண்டினங்கள் மதுவைவேண்டி நறுமலரை நாடிச் சரிவதுபோன்று தமது ஞானமக்களும் அனுக்கிரகங்களைவேண்டித் தம்முடைய மலர்ப்பதங்களைநாடிச் சரிவதைக்கண்ணுற்று அவர் உள்ளங்கனிந்து உவகையடைகின்றார். மாதாவின்மாசம் அவரது பிள்ளைகளுக்கெல்லாம் ஓர் பாக்கியமானமாசம். அதனால் இந்த வணக்கமாசத்தை நாம் வழமைபோல அதிபத்திச் சிறப்பாய்க் கொண்டாட வேண்டும். அது ஆரம்பமாகி முடிகிறவரையிலே காலைமாலை கோவில்சென்று வணக்கமாசப்பத்தியை அனுசரிக்கவேண்டும். கோவிலுக்குச் செல்ல இயலாதிருப்பின் வீட்டிலேயே மாதாவின் சுரூபத்தை அல்லது படத்தைப் பிரசித்தமாக ஸ்தாபித்து, அதனைச் சிங்காரித்து, சுகந்தபுஷ்பங்கள் சாத்தி, மெழுகுவர்த்திகள் ஏற்றி மாலைவேளை குடும்பத்தாரெல்லாம் ஒன்றுசேர்ந்து செபமாலை, பிரார்த்தனை முதலாம் செபங்களாலும், திவ்வியகீதங்களாலும் மாதாவின் புகழைப்பாடி அவரது உதவிசகாயங்களை இரந்து மன்றாடி வணக்கமாசப்பத்தியை அனுசரித்து வரவேண்டும். இவ்வாறெல்லாம் அவரது விசேஷ அன்பிற்கும், கருணைக்கும் எம்மை அருகராக்கிக் கொள்ள வேண்டும். பாத்திமாபதியிலே மாதாகாட்சியளித்துக் கூறிய பொன்மதிகளை இந்தமாசத்திலே நாம் விசேஷவிதமாக நினைவுகூர்ந்து அலைகடல் போன்று நிலைதளர்ந்து கொண்டிருக்கும் இந்த உலகுக்குச் சமாதானமும், அமைதியும் தந்தருளும்படியாக அவரைச் சதா இரந்து வருவோமாக!

## அறையுண்டதிருச்சுரூப ஸ்தாபகம்

நம் மேற்றிராணியாண்டவர் அவர்கள் அர்ச். சிலுவை கண்டெடுத்த திருநாளாகிய இன்று காலை 6-30 மணிக்குப் பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதாவின் ஆசனக்கோவிலுக்கு எழுந்தருளி, அங்கே மத்தியபலிபீடத்திற்குப் பின்புறமாகநிறுவிநிற்கும் உந்நதசுவரிலே கண்ணையுங்கருத்தையும் ஒருங்கேகவர்ந்துகொள்ளும்வகையில் பூச்சியமாக ஸ்தாபிக்கப்பெற்றிருக்கும் அறையுண்ட பெரியதிருச்சுரூபத்தைத் திருச்சபை ஆசாரப்படி ஆசீர்வதித்து, வணக்கத்திற்குத் திறந்துவைத்துத்திவ்வியபூசைப்பலி நிறைவேற்றினர். இத்திருவைபவத்தின்போது ஆசனக்கோவிலிலே திரளானமக்கள் சமூகமாயிருந்தார்கள். ஏறக்குறைய ஓர் ஆளளவு பரிமாணமுள்ளதாய், தென்னிந்தியாவின் கைதேர்ந்த சிற்பிஒருவரால்செதுக்கப்பெற்ற இச்சுரூபமானது, ஓர்உயிருள்ளஓவியம் போன்று காட்சியளித்து, காணுந்தோறும், கண்ணுறுந்தோறும் உள்ளத்தைக் கசிந்துருகச்செய்து- கன்னெஞ்சுதானும் கரைந்துருகும்படியாகச் செய்து, கல்வாரிமலையின் கண்ணருவியானகாட்சியை-விசேஷமாகத் திவ்வியபூசைப்பலிவேளையிலே—தேவநற்கருணை வாங்கியபின் பார்த்துக்கொண்டு பரிபூரணபலனுள்ள செபஞ்சொல்லும்வேளையிலே கல்வாரிமலையின் பிரலாபகரமான சிலுவைப்பலிக்காட்சியை ஞாபகப்படுத்தும் ஓர்மதித்தற்கரிய சின்னமாகத் திகழ்கின்றது. இப்படியான அறையுண்ட பெரிய திருச்சுரூபம்ஒன்று நமது ஆசனக்கோவிலில் ஸ்தாபிக்கப்பட்டாலோவென்று நெடுங்காலமாக நாம் கொண்டிருந்த ஆசை இப்போது நிறைவேறியதைக் கண்டு பெரிதும்மகிழ்ச்சியடைகின்றோம். இந்த அருமையான அறையுண்டதிருச்சுரூபத்தை — நம்முடைய புதிய ஆசனக்கோவிலுக்கு ஓர்சிறந்த அணிகலமாக என்றைக்கும் இலங்கிக்கொண்டிருக்கப்போகும் இந்த அழகான அறையுண்டதிருச்சுரூபத்தைப் பெருந்தொகைப் பணம் செலவிட்டும், அரும்பிரயாசைப்பட்டும்செய்வித்து ஸ்தாபித்திருப்பவரான ஆசனக்கோவில் ஆரும்கோவனையின் முன்னைநாள்மூப்பர் திரு. ஜே. மனுவேற்பிள்ளை அவர்களுக்கு அனைவோரினதும் நன்றித்துதி உரித்தாகுக.

### போர்த்துக்கேய ஆபிரிக்கா

ஆபிரிக்காவிலுள்ள போர்த்துக்கேயநாடுகளில் இன்னும் ஆயிரம்குருமார் அவசியம் தேவைப்படுகின்றார்கள். இந்த ஆயிரம்குருமாரும் கிடைத்தால் அந்நாடுகளிலுள்ள மக்கள் அனைவருமே கத்தோலிக்கராவார்களென "ஆபிரிக்காவில் போர்த்துக்கால்" என்றசஞ்சிகை கூறுகின்றது நாற்பதுலட்சம் மக்களுக்கு மேற்பட்டோரைக் கொண்ட அங்கோலாவும், ஏறக்குறைய அறுபதுலட்சம் மக்களைக்கொண்ட மொசம்பிக்கும், ஏழரைலட்சம் மக்களைக்கொண்ட கயனாவும் ஆபிரிக்கபோர்த்துக்கேயநாடுகளில் அடங்கியுள்ளன. இவர்களில் இருபதுலட்சம்மக்கள் கத்தோலிக்கராவர். இம்மூன்றுநாடுகளிலும் 1,518 குருமார் தொண்டாற்றி வருகின்றனர். இவைதவிர, கேப்வேர்தே தீவுகள் மற்றோர் போர்த்துக்கேயநாடாகும். இதிலே இரண்டு லட்சம் கத்தோலிக்கர் இருக்கின்றார்கள்.

## NOTICE TO THE PARISH PRIESTS

Dear Rev. Father,

May 22nd will be the seventh anniversary of the consecration of His Lordship the Bishop. On this happy occasion let us all join with him in thanking God for all the blessings conferred on him and through him to the diocese of Jaffna. In particular let the little children, whose prayers His Lordship values very much, be associated with him in thanking God for all His mercies.

We are organising a Rally of our school-children on Saturday June 2nd. The Rally will be held in the quadrangle of St. Patrick's College. We invite as many children as possible, especially those within the peninsula, to join in the Rally.

It would be good if the schools bring their flags.

A spiritual bouquet will be presented to His Lordship on behalf of the children of the diocese. Please have the acts of piety from your parish gathered and sent to me before May 30th.

### PROGRAMME

| | |
|---|---|
| 5-00 p. m. | Bishop is conducted in procession to the College quadrangle. |
| | Papal Anthem (Tamil). Oru van kotta kudai nilalil. |
| | Presentation of the Sp. Bouquet. |
| | Address of His Lordship to the children. |
| 5-30 | Benediction of the Most Bl. Sacrament. |
| | Anpuruvai... |
| | Vanthom un mainthar koodi... |
| | Tantum Ergo... |
| | Senma Masetpamenun illa... |
| 5-45—6-30 | Variety Entertainment. |


Please see that the children are trained to sing the hymns so that all may join in the singing.

Yours devotedly in J.C. & M.I.,

HENRY LE COUTOUR, O.M.I.,
*Vicar-General.*

தன் சொந்த நலனைப் பாராட்டாமல் சமுதாயத்துக்காக உழைக்கிறவன் அதிகஞ் செய்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அகில - இலங்கை மரியாயின் சேனைச் சமாகம எதிரொலி



— 1 —

## சிலாப மேற்றிராணியாரின் வாழ்த்துரை

இற்றைக்கு 2500வருடங்கட்குமுன் "தெறெபின்த்" என்னும் பள்ளத்தாக்கின் இருபக்கங்களிலும் இருபெரிய சேனைகள் போருக்குஆயத்தமாகத் தங்கியிருந்தன. ஒருசேனை தேவனை அறியாத பிலிஸ்தீனியருடையது. மற்றது கடவுளுக்கு அர்ப்பணிக்கப்பட்ட இஸ்றவேலரின் சேனையாயிருந்தது. பிலிஸ்தீனிய சேனைத்தலைவன் கோலியாத். அவன் நாற்பதுநாட்களாய் இஸ்றவேல்சேனையை எதிர்நோக்கிச் சென்றான். செல்லும்பொழுது "நான் இன்றைக்கு இஸ்றவேல் இடையருக்குச் சவால்விடுகிறேன்; என்னுடன் தனிச்சண்டைசெய்ய ஒருவனை அனுப்புங்கள்" என்று பெருந்தொனியாகக் கர்ச்சித்துச்சென்றான்.

இஸ்றவேல்சனங்கள் பயத்தினால் முன்னேறவில்லை. அப்பொழுது இஸ்றவேல்சேனையிலிருந்த தன்சகோதரர்களைச் சந்திக்கவந்த தாவீது என்னும் இளைஞன் கோலியாத்தின் சவாலை அறிந்தான். "இவன் யார்? என்ன, இந்தப் பிலிஸ்தீனியன் கடவுளுக்கு அர்ப்பணித்த சேனைக்குச் சவால்விடுகிறான்?" என்று கூறிச் "சவாலை ஏற்றே" னென்று அச்சவாலைக் கையேற்றான். கோலியாத் சிறுவயதுதொட்டுப் பயிற்றப்பட்ட ஓர்போர் வீரன். ஆனால், தாவீது தன்மந்தைகளைப் பார்வையிடுவதைத்தவிரப் போர் முறைபற்றி ஒன்றும் அறியாதவன். இருந்தும், கடவுளில் முழுநம்பிக்கை வைத்துக்கொண்டு முன்சென்றான்.

அவன் தன்னுடன் ஓர்தடியையும், சிலகற்களையும், அக்கிராமத்திற்கு அருகேயிருந்து எடுக்கப்பட்ட ஒரு கவணையும் கொண்டுசென்றான். தாவீது கோலியாத்தை முறியடித்து இஸ்றவேல்சனங்களுக்கு வெற்றியீட்டினான்.

திருச்சபையைஎதிர்த்துப் போராடும் எந்தச்சேனையும் காலகதியில் மடியும். இது நேற்று அல்லது இன்றைக்கு நடந்த ஒருபுதுச்சம்பவமல்ல. ஆனால், திருச்சபை ஸ்தாபகமான காலந்தொட்டு நடந்துவரும் உண்மை. கர்த்தருக்கும், சாத்தானுக்குமிடையில் ஏற்பட்டிருக்கும் போரல்லவா ஆதியில் நீடியதும், அக்கிரமத்தில் கூடியதுமானபோர்? நல்மனமுள்ள மக்கள்தன்னும் எதிரியின் அஞ்சாத்தன்மையைக்கண்டு பின்வாங்கிவிட்டனர். ஆனால், கர்த்தரின்வல்லமையை அறிந்த கத்தோலிக்கராகியநாம் ஏன் பயமின்றிக் கர்த்தருக்குச்சேவை செய்ய முன்வரக்கூடாது?

இவர்கள் சதுரங்கசேனைகளையுடைய பட்டாளமல்ல. இவர்களுக்குச் சக்தியுமில்லை. செல்வாக்கும் இல்லை. இவர்கள் சிலுவையைச் சுமப்பதிலும், யேசுவின் ஐந்துதிருக்காயங்களில் நம்பிக்கைவைப்பதிலுமே தங்கள்சக்தியையும், பெலனையும் அடைகின்றனர்.

மரியாயின்சேனை திருச்சபையில் வல்லபமிக்க ஓர்சேனையாகும. இச்சேனைத்தலைவி கர்த்தரின் மாதாவே. மாதாவிற்கும், அவளின் சேனையாளருக்குமிடையில் இருக்கும் ஞானஐக்கியமானது ஒருசேனைத்தலைவனுக்கும், அவன்சேனையாளருக்குமிடையில் இருக்கும்ஐக்கியத்திலும் மிகவும்கூடியது. அவவே எங்கள்சீவியமும், சந்தோஷமும், சகாயமுமாம். மரக்கிளைகள் மரத்திலிருந்துபெறும் சீவசத்தின் பயனாகப் பூக்களையும், கனிகளையும் கொடுக்கின்றன. அப்படியே தமது வழியாக மரியாய்எங்களுக்கு அடைந்திதரும் ஆசீர்வாதங்களின்பயனாக நாம் உணர்ச்சிஅடைகிறோம். நம்தாயின்மட்டில் நமக்கு அன்புகுறையுமாயின் அவவின்மட்டில் நமது சேவையும் குறைந்துபோய்விடும். ஆனால், நாம் கடவுள்மட்டில் சேவைசெய்ய மேன்மேலும் விருப்பங்காட்டினால் நாம் கூடியஆசியையும், சக்தியையும், பெலனையும் பெறுவோம்.

"ஆண்டவரே! நான் என் பலத்துடன் மரணபரியந்தம் உமக்குச் சேவைபுரிய இயலாதிருப்பதனால் நீரே என்மேல் எழுந்தருளி என்னை உமது வரப்பிரசாதத்தினால் நிரப்பியருளும்."

✠ எட்மன்ட் பீரிஸ், O. M. I.
சிலாப்மேற்றிராணியார்

## மரியாயின் சேனையின் மாபலம்

1921-ம் ஆண்டு புரட்டாசிமாதம் 7-ந்திகதியன்று மாலை டபிளின்நகரில் 17பேர் குழுமியபோது உந்தசேனை ஒன்று உருவாகிறதென்பதை உலகம் உணரவில்லை, அவர்கள் வாரந்தோறும் ஒன்று கூடினார்கள். கருணை நிறைந்த கிரிகைகளைச் செய்தார்கள். ஆயினும் மரக்காலின்கீழ் வைக்கப்பட்ட விளக்குப்போன்றே இருந்தது. ஆனால், அதே தாழ்மையான மக்கள் "தேவதாயாரது கொடியின்கீழ்நின்று பணியாற்றத் தணியாவாஞ்சைகொண்ட வீரர்களே! குழுமி வாருங்கள்" என்று அறைகூவி, அறத்துறையில் தொண்டாற்றிச் சேனையின்பலத்தைக் கூட்டி, ஒழுங்குகளைச் செவ்வனே வகுத்து, தூதர்களை உலகெங்கும் அனுப்பவே ஒருஉண்மை தெற்றெனத் தெளிவாயிற்று. அன்று அப்பதினேழுபேரும் ஒருசிறியஇல்லத்தில் குழுமி உண்டாக்கிய பொறியானது இன்று அக்கினிச்சுவாலையாகமாறிப் பரிசுத்த திருச்சபைக்கு ஒருதேடற்கரிய பெருந்திரவியம்போன்று விளங்குகின்றது.

ஒன்றின்பின்ஒன்றாக வருடங்கள்பல ஓடிமறைந்தன. அந்தப்பொறி பெருந்தீயாகிவிட்டது. அறையில் அரும்பியது அம்பலமாகிவிட்டது. அன்று சாயந்தாம் "இரக்கத்தின் மாதா பக்தர்கள்" என்னும் நாமத்துடன் உருவாகிய சந்தச்சபை—தேவதாயின் ஒரு நன்கொடையாக உலகுக்கு இன்று மரியாயின்சேனையாக விளங்கும் திருச்சபையின் உகந்தகுழு—ஒரு "அகில உலக இயக்க"மாக விளங்குவதைக் கண்டு நாம் களிப்புறுகின்றோம்.

ஒருநாள் இச்சேனையையிட்டு வியப்புற்ற ஓர்அமெரிக்க குருவானவர் டபிளின்நகரிலுள்ள சேனையின் தலைமைக் காரியாலயத்துக்குப் போகிறார். மேல்மாடியிலுள்ள ஒருசிறிய அறைக்குக் கூட்டிச்செல்லப் படுகிறார். மத்தியில் ஒருமேசையும், அதைச்சூழவரக் கட்டுக்கட்டான ஏடுகளும் காணப்படுகின்றன. சிறிதுநேரம் சேனையைச்சேர்ந்த ஆடவர்களுடனும், பெண்மணிகளுடனும் சம்பாஷிக்கிறார். இறுதியில் எழுந்து சிறிதுஆவலுடன் சேனையின் "கொன்சீலிய"த்தைப் பார்வையிட விரும்புவதாகக் கூறுகிறார். இதைக் கேட்டதே அங்கிருந்தவர்களின் வதனத்தில் புன்முறுவல் தவழ்கிறது. அதேநேரத்தில் "சுவாமி! இதுதான் கொன்சீலியம்; இந்தச் சிறியஇடம்தான் சேனையின் தலைமைக்காரியாலயம்" என்று ஒருவர்கூறுகிறார். இது சேனையின் எளிமைக்கு நல்லதோர் எடுத்துக்காட்டு.

### சேனையின் எளிமை

சேனை அன்றிருந்த நிலைமையிற்றான் இன்றும் இருக்கிறது. இன்றும் ஆதியிலிருந்ததுபோல ஆடம்பரமற்ற—அதிகாரமற்ற எளியநிலையிற்தான் இருந்துவருகிறது. புகழ்ச்சி, பெருமை, வளர்ச்சி என்னும் சூறுவளிக்கெதிராகச் சேனைதளராது, தனது ஆரம்பகால நிலையில்தான் இருக்கிறது. இந்தச் சேனை படித்தமக்களுக்கும், விசேஷவிதமாக உலகத்தின் சாதாரணமக்களுக்கும் சேவைசெய்துவருகிறது.

சேனையின் விருத்தியைச் சற்றே உற்றுநோக்குவோம். உலகில் அதன் மின்னல்வேக அபிவிருத்தியைக் கூர்ந்து கவனிப்போம். பெரியனவாகத் தோன்றும் இடங்களெல்லாம் சர்வசாதாரண சிறியனவாக மதிக்கப்பட்டிருக்கின்றன. சேனையின் கூட்டத்துக்குச் சமுகமாயிருங்கள்; அல்லது சேனையின் முதுகெலும்புபோன்ற ஊழிய அங்கத்தவர்களுடன் சல்லாபித்துப் பாருங்கள். இங்கேயும் என்னத்தைக் காணலாம்? பாரபட்சமில்லாத, உலகப்பற்றற்றமக்கள் சாத்ராணஎளியமுறையில் மூன்னின்று நடத்துவார்கள்.

### சாதாரண மக்களுக்கு :

சாதாரணமக்களைத் தன்பக்கமாய்க் கவர்ந்து, அவர்களைத் தன்சேவையின் முன்னணியில் நடத்துதல் சேனையின் ஒருசிறந்தபண்பாகும். எம்பெருமானின் செயல்களெல்லாம் வியக்கத்தக்கனஎன்பதை யார்தான் மறுக்கமுடியும். விசுவாசப் பரப்புதல்சபைக் கல்லூரிஊழியரிடையே இத்தாலியில் முதற்சைனியம் ஆரம்பிக்கப்பட்டது. இஃது, எளியமக்கள்மேல்தான் மரியாயின்கவனமெல்லாம் உள்ளதுஎன்பதை வெகுதிலாம்பரமாய்க் காட்டுகின்றது.

அதிகாரஅனுமதியுடன் ஸ்தாபிக்கப்பட்ட முதல்உரோமைச் சைனியம் வீட்டுப்பெண்களைக் கொண்டதாய் இருந்தது. எளியவர், தாழ்ந்தவர் சகலருமே தேவதாயாரின் திருப்பணிக்குத் தகுந்தவர்என்பதை இதுகாட்டுகிறது.

ஒவ்வொருநாட்டிலும் சேனையின் வரலாறு இம்மாதிரித்தான் இருக்கும். முப்பத்தைந்துவருட வரலாற்றின் ஒவ்வொருபகுதியிலும் சேனையின் அதிகாரமும், பலமும் இங்கேதான் அடங்கும். "நீங்கள் எங்கேசென்றாலும் சேனையின் முதுகெலும்புபோல் விளங்குவோர் உண்மையாகவே மிகவும்எளிய சாதாரணமானமக்கள்தான் என்பதை அறிவீர்கள்" என மரியாயின்சேனையை அடியிட்டவரான "பிராங்க் டவ்" அவர்கள் கூறுகிறார்.

"சாதாரணமனிதனை மட்டுமல்ல, கல்லாத பண்டைக்கால மனிதனையும் தன்வசம்இழுக்கச் சேனைக்குத்தெரியும். நன்குகற்றவரும் இதன்ஒழுங்குகளை மனப்பூர்வமாய் ஆதரிக்கிறார்கள். ஆகவே, சேனை இதுகாறும் தழைத்ததுபோல் இன்னும்தழைக்கட்டும்; எளிய மனிதனுக்கு எளியமுறையைக் கையாளும் இந்தச்சேனை செழித்தோங்கட்டும்!

### சீனாவில் நிலைமை :

மரியாயின்சேனை சீனாவில் இரத்தஞானஸ்நானம் பெற்றுவிட்டது. அங்கே திருச்சபைக்கு வேண்டிய நேரத்தில் சந்தேகமில்லாமல் தனது சாதுரியத்தை எடுத்துக்காட்டித் தனது விசுவாசத்தையும் நிரூபித்துவிட்டது. வேறெங்குமில்லாமுறையில் அங்கேதான் எளியமக்களுக்குத் தனது முதல்வேண்டுகோளை விடுத்து, சாதாரணமக்களைத் தன்பக்கமாகத்திருப்பும் ஆற்றலில்தான் தனதுஅதிகாரம் உண்டென்பதை எண்பித்தும்விட்டது. சாதாரணமனிதனை விசுவாசத்தின்வீரனாக மாற்றுஞ்சக்தியில்தான் தனது பலம் இருக்கிறதென்பதையும் மரியாயின்சேனைகாண்பித்துவிட்டது. சிறைச்சாலை தனதுவாயைப் பிளந்திடினும், சித்திரவதைதான் செய்திடினும் கிறீஸ்துநாதரின்மேலுள்ள விசுவாசம் சற்றும்குன்றாதெனப் போராடிய ஆயிரக்கணக்கான சேனையாளரைப்பற்றிக் கேள்விப்படாதார் உண்டா? சாதாரண தொழிலாளியாகிய ஓர்சீனச் சேனையாளன் பயங்கரவாதிகள்கையில் அகப்பட்டு, மரணத்தை மனப்பூர்வமாய் வரவேற்று, வேதத்தைமறுதலியாது, யேசுமரிசூசைஎன்னும் திருநாமங்களை உச்சரித்து உயிர்விட்டான்என்பதை அறியாதார் யாருமுளரோ? சீனாவின் சேனைவீரனாகிய வண. மக்கிராத்சுவாமியார் மிகவும்கண்டிப்பாக அண்மையில் பின்வருமாறு கூறலாயினர்:

"சேனை ஸ்தாபிக்கப்பட்டு ஆறுமாதகாலமாகுமுன் பொதுஉடைமையின் பயங்கரவாதியாக மாறிவிட்டது. பொதுஉடைமைக்குப் பிரித்தானி, ஐக்கிய அமெரிக்கதேசங்கள்தான் இதுவரை எமனாகஇருந்தன. ஆனால், தற்பொழுது அது திருச்சபைக்கும், அதன்பக்கபலமாய்விளங்கும் மரியாயின்சேனைக்கும் பயந்து நடுங்குகிறதென்றால், சேனையின்பலம் எத்தகையதென்பதை நாம் ஒருவாறு அறிந்துகொள்ளக்கூடும். ஆகவே, இச்சேனையில்சேர்ந்த என்னையும், உங்களையும்போன்ற எளியசாதாரண மக்கள்தான் இன்று பொதுஉடைமைக்கட்சியின் பயங்கரவாதிகள்என்பது வெள்ளிடைமலை.

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூசையப்பரிடம் போங்கள்

— M. J. M. —

கிறீஸ்துநாதரின் மறையுடலாகிய திருச்சபையினதும், அதன் ஒவ்வொரு அங்கத்தவரினதும் உயிரும் சீவியமுமாய் இருப்பவர், சம்பாவிது அப்போஸ்தலர் சொல்வதுபோல் கிறீஸ்துநாதர்தாமே. நரதேவனின் இயற்கையுடலுக்கு மாத்திரமல்ல, மறையுடலுக்கும் தாயாயிருக்கும்படி மரியம்மாளைச் சர்வேசுரன் அநாதிகால மாகவே நியமித்தருளினர். மாமிச ஐக்கியம்என்னும் பரமஇரகசியம் நிறைவுபெறுவதில் ஆண்மையும், தொழிற்பாடுமுள்ள தொடர்பு பூண்டவராய் அர்ச். சூசைமாமுனிவர் திவ்வியயேசுவின் திருக்கைத்தாதையும், காவலருமாயிருந்ததுபோல, திருச்சபையிலே அவரதுமறையுடலுக்கும், அதன் ஒவ்வொரு அங்கத்தவர்மாட்டும் அதேகடமையை நிறைவேற்றும்படி சர்வேசுரன் அவரைநியமித்திருக்கிறார். எமதுஇரட்சகரின் கைத்தாதையாயிருந்து அர்ச். சூசையப்பர் தமது கைகடுக்க, மெய்வருந்த உழைத்துத் திவ்விய யேசுவைத் தாபரித்ததுபோல, பரமன்சமூகத்தில் தமது வல்லபமுள்ள மன்றாட்டினால் திருச்சபைக்கும், ஒவ்வொரு கிறீஸ்துவனுக்கும் அவர் கைத்தாதையின்கடமையை நிறைவேற்றுகிறார். பாலஇரட்சகரை ஏரோதனிடமிருந்து காப்பாற்றி, எகிப்தில் பராமரித்ததுபோல, இப்பொழுதும் தமது காவலுக்குரியவர்களை ஆபத்துகளில்நின்றுதற்காத்து, அவசிய தருணங்களில் அபயமளித்துத் திருச்சபையினதும், விசுவாசிகளினதும் காவலராய் விளங்குகிறார்.

### திருச்சபையில் அவருடைய நிலை

திருச்சபையையும், அதன்மக்களையும் பாதுகாப்பதில் மரியம்மாளின்பின் அர்ச். சூசையப்பர் முதலிடம்வகிக்கிறார். ஆனதுபற்றிச் சகல சம்மனசுகள், மற்றச் சுத்தவாளர்களுக்கும் மேலானவணக்கம் அவருக்குரியது. ஆசாரத்துக்குரிய யேசுவின்மரியா கன்னியாஸ்திரி பெற்றதோர் தரிசனத்திலே, எமது ஆபத்துக்களிலும், துன்பங்களிலும் சூசையப்பரை மன்றாடுவதின் முக்கியத்துவத்தைப் பரிசுத்ததேவமாதா காண்பிக்கலானர். "எனது பத்தாவுக்கு உன்னதமானவர் அருளிய உரிமைகள், சலாக்கியங்களைப் பற்றி உலகமக்கள் அறியாதிருக்கிறார்கள். சர்வேசுரனிடத்திலும், என்னிடத்திலும் அவருடைய மன்றாட்டின் வல்லபம் எத்துணைபெரிதென்பதை அவர்கள் அறிவதில்லை. ஆனால், மகளே! மோட்சத்தில் அவர் திவ்வியகர்த்தருடன் மிகவும்ஐக்கியமாகவும், பாவிகளுக்கு வரவேண்டிய தேவநடுவரின் தண்டனையை விலக்குகிறதற்கு மிக வல்லபமுள்ளவராகவும் இருக்கிறாரென்று நான் உறுதியாய்க் கூறுகிறேன். எந்தக் கஷ்டத்திலும் அவருடையசலுகையைத் தேடு. ஏனெனில், எனது திருப்பத்தா கேட்பதைப் பரமபிதா கொடுப்பார்."

மேலும் பாத்திமாவில் 1917-ம் ஆண்டு புரட்டாசிமாதம் 13-ந் திகதியன்று எமது ஆண்டவள் கூறியதென்ன? "பாலயேசுவுடன் அர்ச். சூசையப்பர் உலகத்துக்குச் சமாதானத்தைக் கொடுக்க வருவார்." 1917-ம் ஆண்டு ஐப்பசிமாதம் 13-ந்திகதியன்று சூசையப்பர், பாலயேசு



இவர்களுடன் எமது ஆண்டவளுங் காட்சியளித்தபோது, திவ்வியயேசுசனங்களை ஆசீர்வதிக்குமுன் அர்ச். சூசையப்பர் அவர்களை மும்முறை ஆசீர்வதித்தார். இதன்கருத்தை நாம் விளங்கிக் கொண்டோமா? இச்சம்பவத்தை நாம் அதிகம்பறுவாய் பண்ணுவிடினும், அர்ச். சூசையப்பரது மன்றாட்டின் வல்லபத்தைச் சமாதான திட்டத்தில் சேர்த்துக்கொள்ளாவிட்டால், அது உருப்படாது என்பது திண்ணம்.

### பாப்புமார் அளிக்கும் ஊக்கம்

அர்ச். சூசையப்பரை மன்றாடுவதின் அவசியத்தைத் தற்கால பாப்புமாரும் நன்குவிளங்கி வற்புறுத்துகிறார்கள். மரியன்னையின் பாப்பானவர் 9-ம் பத்திநாதர். அவர் அர்ச். சூசையப்பரின் அடைக்கலத்திருநாளைத் திருச்சபையில் பொதுவாகக் கொண்டாடும்படி ஏற்பாடுசெய்தார் (1847). அன்றியும், அர்ச். சூசையப்பர் திருச்சபையின் பாதுகாவலரெனப் பிரகடனஞ் செய்து, திருநாளைப் பங்குனி 19-ந்திகதி கொண்டாடும்படியும் கட்டளையிட்டார் (1870 மார்கழி 8). அப்போதுதான் பங்குனி மாதத்தைச் சூசையப்பரின் வணக்கமாதமாக அனுசரிப்பது ஆரம்பமாயிற்று. இதைப்பிற்காலபாப்புமாரும் பாராட்டிஊக்கப்படுத்தி யிருக்கிறார்கள்.

13-ம் சிங்கராய பாப்பானவர் மந்திரமாலையில் அர்ச். சூசையப்பர்பேரால் பத்திச்செபம் சொல்ல உத்தரவுதந்ததுமல்லாமல், திருச்சபைக்கும், எம்மெல்லோருக்கும் அர்ச். சூசையப்பருடைய விசேஷசலுகையைக் கேட்கும்கருத்துடன் ஐப்பசி மாதத்தில் செபமாலையின்பின் அவருக்கு விசேஷசெபஞ்செய்ய வேண்டுமென்றுங் கற்பித்தார். அத்துடன் சாதாரணபூசைமுடிவில் "பாவிகள் மனந்திரும்புதலை"யும், "பரிசுத்த மாதாவாகிய திருச்சபை விடுதலைபெற்று மகிமையடைகிற"தையும் துரிதப்படுத்தும்படியாகப் பரிசுத்த கன்னிகை, மற்றுஞ்சுத்தவாளருடன் அர்ச். சூசையப்பரும் வேண்டப்படுஞ் செபத்தைச் சொல்லவேண்டுமென ஆக்கித் தந்தவரும் அவரே.

"கிறீஸ்துவின் கவனமுள்ள ப்ரிபாலகர்", "தொழிலாளிகளுக்கு மாதிரிகை", "குடும்ப சீவியத்துக்கு அலங்காரம்", "பிசாசுகளுக்குப் பயங்கரம்" என்ற வேண்டுதல்கள் வரும் அர்ச். சூசையப்பர் பிரார்த்தனையை அர்ச். பத்தாம் பத்திநாதர் அங்கீகரித்தார் (1909). அதே பரிசுத்தபிதாவே 1912-ம் ஆண்டு அர்ச். சூசையப்பரின் அடைக்கலத்திருநாளை விசேஷ கௌரவமுள்ளதாக்கி, அட்டகத்துடன் உத்தானத்துக்குப் பின்வரும் 2-ம் ஞாயிற்றுக் கிழமையை அடுத்த புதன் கிழமை கொண்டாடவேண்டுமென்று கற்பித்தார். 11-ம் பத்திநாதர் பாத்திமாசெய்தியைப் பரப்பியதுமாத்திரமல்ல, "நிரீச்சுரபொதுவுடைமையைப் பற்றி எழுதிய சுற்றுநிருபத்தில் மேல்வருமாறு குறித்துமிருக்கிறார். "கிறீஸ்துவின் இராச்சியத்தில் கிறீஸ்துவின் சமாதானம் பரம்புவதைத் துரிதப்படுத்துவதற்குப் பொதுவுடைமைக்கெதிராகத் திருச்சபைஅணிவகுக்கும் போரியக்கத்தை அதன்வல்லபமுள்ள காவலரான அர்ச். சூசையப்பருடைய விருதின் தலைமையில் வைக்கிறோம்" என்பதே. சாதாரண பூசையின் பின் சொல்லுஞ் செபங்களை ருஷியா மனந்திரும்புதலுக்காக ஒப்புக்கொடுக்கும்படி கட்டளையிட்டவரும் 11-ம் பத்திநாதரே.

### அர்ச். சூசையப்பர் தொழிலாளர்

பத்தாம்பத்திநாதரும் அர்ச். சூசையப்பர்பேரால் ஓர்செபத்தை ஆக்கினர். அதிலே நம்மை அர்ச்சிக்கவும், நமதுபாவத்துக்குப்பரிகாரமாகவும், நாம்புண்ணியத்தில் வர்த்திக்கவும் நமது தொழில்முயற்சியைக் கருவியாக்கிக்கொள்ள அவருடைய உதவி வேண்டப்படுகிறது. தொழிலாளரை நாசமாக்குவது புண்ணியக் குறைவன்றோ! 1917-ம் ஆண்டு பாத்திமாமாதா எமதுநாளாந்த கடமைகளைப் பாவத்துக்குப் டரிகாரமாவும், எங்கள் புண்ணியவர்த்திப்புக்கு வழியாகவும் செய்துவரும்படி கேட்டுக்கொண்டதும் இதைத் தானே!

அண்மையில் 12-ம் பத்திநாத பாப்பரசர் தொழிலாளரான அர்ச். சூசையப்பரின் திருநாளைப் பிரசித்திபண்ணி, இத் திருநாளை விசேஷசிறப்புகளுடன் தொழிற்தினத்தில் (Labour Day) வைகாசி 1-ந் திகதியன்று கொண்டாடும்படி கட்டளையிட்டார். அதாவது, தொழில்முயற்சியை முதலாளிகளும், தொழிலாளரும் துர்ப்பிரயோகஞ்செய்வதினுலுண்டாகும்கேடுகளை அர்ச். சூசையப்பர் நீக்குவார் என்ற நம்பிக்கை பெறப்படுகிறது.

ஆதலின், அர்ச். சூசையப்பரில் அயராதவிசுவாசமும், அவருடையவல்லபத்தில் அசையாத நம்பிக்கையுங்கொண்டு, கிறீஸ்துவர்கள்மாட்டுச் சர்வேசுரன் அவருக்கு ஒப்படைத்திருக்கும் பாதுகாவல்கடமையை நிறைவேற்றுவாரென்று உறுதிகொண்டவர்களாய், "சூசையப்பரிடம் போங்கள்" என்ற ஏவலை எமதுவிருதுமொழியாய்க் கைக்கொள்ளக்கடவோம்.

---

### மந்திரியாரும் மிஷனரிமாரும்

தென்னிந்தியாவிலே சோடாவாதிராஜா மடத்தைச்சேர்ந்த ஸ்ரீவிஸ்லோத்தம தீர்த்தசுவாமிஜி தமது சொந்தச்செலவிலே உடுப்பியிலுள்ள மகாத்மாகாந்தி ஞாபகார்த்த கல்லூரியில் அமைத்தவிடுதியைச் சென்னைக் கல்வி மந்திரி திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் திறந்துவைத்துப் பேசியபோது, "கிறீஸ்துவ மிஷனரிமார்களின் நோக்கம் எதுவாயிருந்தபோதிலும் அவர்கள் இந்தியாவில் கல்வியைப் பரப்புவதற்குமிகவும்உதவியாய் இருந்தார்கள் என்பதை மறுக்கமுடியாது" எனக் கூறியிருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நாத்திகத்தைப் பரப்பும் முயற்சிகள் தோல்வியடைந்ததின் காரணம்

—: ஹறி சுவாட்ஸ்: —

ருஷியாவிலே லெனின்கிருட்நகரிலுள்ள விஞ்ஞானவித்தியாலயத்தில் சமயசரித்திரக் கழகமொன்று நடைபெறுகிறது. இந்தக் கட்டடத்தில் முன்பு கஸான் ஆசனக்கோவில் அமைந்திருந்தது. கழக கட்டடத்தின் மத்தியில் ஒருபெண தனதுகரங்களில் ஒரு குழந்தையை வைத்திருப்பதுபோல ஓர்உருவச்சிலை வைக்கப்பட்டுள்ளது. ஒருசிலுவையின் பாரத்தினுல் அவளுடையமுதுகு வளைந்திருந்தது.

இந்த "நூதனப் பொருட்காட்சிச் சாலையிலுள்ள விஞ்ஞானகாட்சிப் பொருள்க"ளுக்கு இது ஒருஉதாரணமாகும். இதில் படுமோசமான சமயதுவேஷப் பிரசாரஞ்செய்யும்—முக்கியமாக ரோமான்கத்தோலிக்க சமயத்துக்கும், அமெரிக்காவுக்கும்எதிராகப் பிரசாரஞ்செய்யும் பொருள்களே வைக்கப்பட்டுள்ளன.

## கம்யூனிஸ்தர்கள்

38 வருடங்களாகக் கம்யூனிஸ்தர்கள் சமயத்தைத்தாக்கி நாஸ்திகபிரசாரம் செய்துவந்துள்ளனர். ஆனுல், அது இலட்சக்கணக்கானமக்கள் கடவுளில்கொண்டுள்ள நம்பிக்கையைஅகற்றத் தவறிவிட்டது. முக்கியமாகக் கிறீஸ்துசமயம் தொடர்ந்து உறுதியடைந்துள்ளது.

கம்யூனிஸ்தர்களின் சமயதுவேஷப் பிரசாரம் வாலிபர்களிடையே மிகப் பெரிய வெற்றிபெற்றுள்ளது. ஆனுல், அவர்களிடையேயும் அந்தவெற்றி பூரணமாகவில்லை. அரசாங்கத்தின் நாஸ்திககொள்கைக் கெதிராக அநேக சோவியற்பெற்ரோர் தங்கள்பிள்ளைகள் கடவுள் நம்பிக்கை உள்ளவர்களாக வளரவேண்டுமென்ற திட சங்கற்பத்துடன் நிற்கின்ருர்கள்.

சமீபத்தில் நான் சோவியற்ருஷியாவில் ஐந்துவாரங்கள்வரை சுற்றுப்பிரயாணம் செய்தபோது முப்பதுக்குமேற்பட்ட கிறிஸ்தவஆலயங்களுக்கும, யூதவழிபாட்டு ஸ்தலங்களுக்கும் விஜயம் செய்தேன். அநேகருடன் சம்பாஷணைகள்நடத்தினேன். இந்தவிஜயங்களிலிருந்தும், சம்பாஷணைகளிலிருந்தும் சோவியற்ருஷியாவில் கிறிஸ்துசமயம் இப்பொழுது மறுமலர்ச்சியடைந்துவருகிறதென்பதை அறிந்துகொண்டேன். சமயநம்பிக்கை சோவியற் தேசாபிமானத்துக்குப் பொருத்தமானதேஎன்று ருஷியகம்யூனிஸ்தகட்சிக் காரியதரிசி திரு. நிக்கிட்டா எஸ். குருஷ்சேவ் கடந்தகார்த்திகையிலே விடுத்தஅறிக்கை இதற்குஉதவியுள்ளது.

## சமயகல்வியில்லை

சோவியற்ருஷியாவில் சமயத்துக்கு அநேகஇடையூறுகள் இருக்கின்றன என்பதற்குத் தெளிவானசான்றுகள் உண்டு. வழிபாடுநடத்தும் கிறிஸ்தவ ஆலயங்களினதும், யூதவழிபாட்டுத் தலங்களினதும் தொகைமிகக் குறைவாகும்.

சமயத்தையோ அல்லது சமயப் பிரிவுகளையோ பொறுத்து, குருமாருக்குப் பயிற்சியளிக்க வசதிகளில்லை. இல்லத்துக்குவெளியே இளம் வயதினருக்குக் கட்டுப்பாடானமுறையில் சமய கல்விபுகட்டும் ஏற்பாடுகளில்லை.

சமயநம்பிக்கைக் கெதிராகப் பாடசாலைகள், புதினப்பத்திரிகைகள், வானுெலிகள், தெலிவிஷன்கள், புத்தகங்கள், சஞ்சிகைகள், மற்றும்சாதனங்கள்மூலமாக அரசாங்கத்தின் பிரசாரசக்திமுழுவதும் திரண்டுள்ளது.

"குருட்டுமத நம்பிக்கைகளை அம்பலப்படுத்தும்" விரிவுரைகள் நாடெங்கும் நிகழ்த்தப்படுகின்றன. அதேசமயத்தில் அரசாங்கம், சமயவிடுமுறை நாட்களை அனுஷ்டிப்பதற்காகப் பிரசைகள் தங்கள்வேலைநேரத்தில் செல்லாதுதடுக்கச் சகலசக்திகளையும் உபயோகிக்கின்றது.

ஆலயத்துக்குப் போவதிலிருந்து அச்சம்முற்ருக நீங்கவில்லை. கம்யூனிஸ்தகட்சி அங்கத்தவர்கள்சிலர் தங்கள் குழந்தைகளுக்கு இரகசியமாக ஞானஸ்நானம் கொடுத்திருப்பதாகச் சொல்லப்பட்டபோதிலும், கட்சிஅங்கத்தினர்கள் சமயவைபவங்களில் பிரசன்னமாயிருக்க அஞ்சுகின்ருர்கள்.

ஆலயத்துக்குப் போகாமலிருப்பதே அறிவுடைமையாகுமென்று தாங்கள் கருதுவதாகச் சிலசாதாரண பிரசைகள் தெரிவித்தார்கள்.

"எனது சொந்தஇல்லத்தில் நான் கடவுளைநோக்கிப் பிரார்த்தனைசெய்ய முடியும்; கடவுளில் எனக்குநம்பிக்கை உண்டென்பதை எவரும் அறியத் தேவையில்லை" என்று ஒருவர் சொன்னுர்.

ஞாயிற்றுக்கிழமையன்று வழக்கமாகக் கிறிஸ்துவஆலயங்களில் மக்கள் நிறைந்திருக்கிருர்கள். இவர்களில் பாதிப்பேருக்குமேல் வயதானபெண்களாவர். ஒருசில குழந்தைகள் உட்படப் 10 அல்லது 20 சத விகிதத்தினர்மட்டுமே 30 வயதுக்கு உட்பட்டவர்களாயிருக்கின்றனர். இவர்களெல்லோரும் மிகுந்த சமயபக்தியுள்ளவர்கள்.

மக்களிடையே சமயத்துக்கு எவ்வளவுசெல்வாக்கு உண்டென்பதை அறிந்துகொள்ள விசேஷ விடுமுறை நாளன்று ஒருவர் ஆலயத்துக்குப் போய்ப் பார்த்தால்தெரியும். இத்தகை சந்தர்ப்பங்களில் மக்கள்பெருந்தொகையாக வருகின்றனர். அநேக குழந்தைகளும், போர்வீரர்களும், நடுத்தரவயதான ஆண்பெண்களும் காணப்படுகின்றனர். பெற்ருேர் பரிசுத்தபண்டங்களுக்கு வணக்கம்செலுத்துவதற்காகத் தளர்நடையோடு பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு வருகிருர்கள். வழிபாட்டின்போது ஆழ்ந்த தெய்வபக்தியும், மகிழ்ச்சியும்பொருந்திய சூழ்நிலைநிலவுகிறது.

நான் விஜயம்செய்த ஆலயங்களில் அநேகம் அழகாகப்புதுப்பிக்கப்பட்டு, புதுவர்ணம் பூசப்பட்டுள்ளன. இவ்வேலையில் பெரும்பகுதி சமீபத்தில் நடந்துள்ளதாகத் தோன்றுகிறது.

> **சிந்தியாமல் வேகமாகப் பேசுவது "பிறேக்" இல்லாமல் வண்டியை வேகமாகச் செலுத்துவது போலத்தான்.**

## அர்ச். சூசையப்பர் குஷ்டரோகர் சாலை தூத்துக்குடி

முப்பதுவருடகாலம் தூத்துக்குடி மேற்றிராணியாராக விளங்கியிருந்து சமீபத்தில் பரமபதமடைந்தவரான மகாவந். ரோச் ஆண்டவர் அவர்கள் தமது மேற்றிராசனத்தில் ஸ்தாபித்துப் போன பலவேறு தருமஸ்தாபனங்களிலே, தூத்துக்குடியிலுள்ள அர்ச். சூசையப்பர் குஷ்டரோகர்சாலை அவரின் தலைசிறந்த ஞாபகசின்னமாகத் திகழ்கின்றது. வறிய குஷ்டரோகர் மட்டில் அவர்கொண்ட பெரும்பற்றுதலானது, 1949-ம்ஆண்டு இந்தக்குஷ்டரோகர்சாலையை ஸ்தாபிக்கும்படி அவரை நிர்ப்பந்தஞ் செய்யலாயிற்று. பலவிடங்களிலுமிருந்து பலத்தஆட்சேபனைகள் எழுந்தவிடத்தும் அவைகளையெல்லாம் அவர் பறுவாய்பண்ணுது இதனைஅடியிடலாயினர். 160 நோயாளருக்குப்போதிய இடவசதியுள்ள ஒன்பது 'வாட்'டுகளும், மூன்று குடிசைகளும் இதுவரை இதிலே அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆனுல், பையன்களுக்கென விசேஷ 'வாட்' ஒன்று நெடுங்காலமாக அங்கு தேவைப்படலாயிற்று. தற்போது "ரோச் மேற்றிராணியாரின் ஞாபகார்த்த வாட்" ஒன்றுக்கு அங்கே சென்றபங்குனிமாதம் 18-ந் திகதியன்று — அதாவது, அர்ச். சூசையப்பர்திருநாளுக்கு முந்தியதினமன்று மகாவந். தோமஸ் பெர்னுண்டோ ஆண்டவரால் அஸ்திபாரக்கல் ஆசீர்வதிக்கப்பெற்று, திரு. சந்திரசேகர நாடார் அவர்களால் இடப்பட்டுள்ளது. இந்த விசேஷ'வாட்' ஓர் பாடசாலையையும், வாசிகசாலையையும், நூல்நிலையத்தையும் கொண்டதாயிருக்கும். தூத்துக்குடி, அர்ச். சூசையப்பர் குஷ்டரோகர் சாலை இற்றைக்கு ஏழுவருடங்களுக்கு முன்—அதாவது, 1949-ம்ஆண்டு ஐப்பசிமாதம் 30-ந் திகதியன்று 15 நோயாளருடன் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது இதிலே 140 ஆடவர்களும், 25 பெண்களுமாக 165 குஷ்டரோகர்கள் இருந்துவருகிருர்கள். ஆயிரவருக்குமேற்பட்ட நோயாளர் இதிலே சிகிச்சைபெற்றிருக்கிருர்கள்.

---

## அர்ச். லூயிஸ் மன்னரின் சந்ததியார்

பிரான்சியஅரசின் வெளிநாட்டுமந்திரிபகுதி உலகின் பல்வேறுநாடுகளிலும் போய்க் குடியேறியுள்ள அர்ச். லூயிஸ்மன்னரின் சந்ததியாரையெல்லாம் கண்டுபிடித்துவிட்டது. அந்த மன்னரின் புனிதஎலும்புகள் அடுத்து வரும் வைகாசிமாதம் 8-ந் திகதியன்று பரீஸ்நகருக்கு வடக்கே சிலமைல் தூரத்திலுள்ள அர்ச். தெனிஸின் ஆலயத்தில் வைக்கப்படவிருக்கின்றன. இத்திருச்சடங்கிற்கு அர்ச். லூயிஸ் மன்னரின் சந்ததியார் அனைவரும் விஜயம்செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிருர்கள். அர்ச். தெனிஸ்(தியோனிசியார்) ஆலயத்தில்தான் ஏறக்குறைய 600 வருடங்களாகப் பிரான்சியமன்னர்கள் அடக்கஞ்செய்யப்பட்டுவந்தார்கள். பிரான்சிய அரசியற் புரட்சிக்காலத்திலே 1793-ம் ஆண்டு இருந்துவந்த பயங்கரஆட்சியின்போது கலகக்காரர் இக்கோயிலிலிருந்த கல்லறைகளையெல்லாம் சேதப்படுத்தி, அங்கிருந்த விலையுயர்ந்த பொருட்களையெல்லாம் கொள்ளையடித்தும், பிரேதங்களையும், எலும்புகளையும்கண்டபடிஎறிந்தும் விட்டனர். பிற்காலத்தில் அர்ச். லூயிஸ் மன்னரின் புனித எலும்புகளிற் சில அவருடைய பிரேதப்பேழைக்குள்ளேயே ஒருமூலையில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இவைகள் பத்திரமாகக் காப்பாற்றப்பட்டுவந்தன. இவ்வெலும்புகளைச் சேமிப்பதற்காக இப்பொழுது செய்யப்பட்டுள்ள பேழை அவ்வரசர் கர்த்தரின் திருமுண்முடியை ஸ்தாபிப்பதற்காகக்கட்டிய சென் சப்பிள் என்ற அழகிய திருச்சிற்ருலயத்தைப்போல் சிறியஅளவில் தந்தத்தாலும், கண்ணுடிகளாலும்அமையப்பெற்றுள்ளது.

ஒன்பதாவதுலூயிஸ்மன்னர் 1215-ம் ஆண்டு பிறந்தவர். இவருக்குப் பதினெரு வயதாகையில் இவர் தந்தை எட்டாவது லூயிஸ்மன்னர் இறந்துவிட்டார். மகனுக்குத் தக்கவயது வருகிறவரையில் பிளான்ஷ் தெகஸ்தீல் அரசியே, மகன்பெயரால் அரசாங்க விவகாரங்களையெல்லாம் கவனித்து வந்தாள். இவர் 44 வருடம் அரசுபுரிந்து 1270-ம் ஆண்டு சிலுவை யுத்தத்தின் போது ரியூனிசியாவில் இருக்கும்போது சுரங்கண்டு இறந்தார். இவருடைய திருநாள் ஆவணிமாதம் 24-ந் திகதி கொண்டாடப்பட்டு வருகிறது.

---

தொழிலாளரின் பாதுகாவலராகிய

## அர்ச். சூசையப்பர் திருநாள்

கொழும்புத்துறைத் தாபனத்தின் பாதுகாவலராம் சஞ்சூசைமாமுனிவரின் அடைக்கலத்திருநாள் இம்முறை எமதுபரிசுத்தபிதா பன்னிரண்டாம்பத்திநாதபாப்பரசர் விதித்தபடி, தொழிலாளரின்பாதுகாவலராகிய அர்ச். சூசையப்பர் திருநாளாக அடுத்துநிகழும் வைகாசிமாசம் 6-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படும். கொழும்புத்துறைப் பழையமாணவர்சங்க ஆதரவில்நடைபெறும், இத்திருநாளில் தாபனத்தின் பழைய மாணவரும், பழையமாணவர்சங்கத்துடன் இணைந்த சகலகத்தோலிக்க ஆசிரியர், ஆசிரியைகளும், மற்றும் பக்தர்களும் பங்குபற்றுமாறு அழைக்கப்படுகிருர்கள்.

5-5-56 — சனிக்கிழமை மாலை 7 மணிக்கு மாலையாராதனை.

6-5-56 — ஞாயிறு காலை 6-30 பாடற்பூசை.

காலை 9-00 படிப்பித்தல் உபகரண பொருட்காட்சி.

காலை 9-30 பொதுக்கூட்டம்.

மாலை 4-30 மாலையாராதனை திருச்சுரூபசுற்றுப்பிரகாரம்.

தாபனத்தலைவர்

25-5-56. சுவாமியார்

---

● இந்தியாவின் அதிவிருத்தாப்பிய குருப்பிரசாதிகளில் ஒருவராயிருந்துவந்தவரான மொன்சிஞ்ஞோர் ஜேக்கப் கல்லறுக்கல்சுவாமியார் தமது 93-ம் வயதிலே சமீபத்தில்காலஞ்செல்லலாயினர். இவர் 67 வருடகாலம் ஓர்குருவாய் இருந்துவரலானுர். சங்கனுச்சேரி மேற்றிராசனத்தின் அப்போஸ்தலிக்க பரிபாலனராய் மும்முறைகடமை பார்த்திருக்கின்ருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு

## தாண்டவன்வெளித் தபால்

**பங்குக்கோவில் பாடகர் குழுவின்சுற்றுலா :** தாண்டவன்வெளி, பரிசுத்தவியாகுலமாதாகோயிற் பங்கைச்சேர்ந்த பாடகர்குழுவினரின் அயராதசேவையை முன்னிட்டு வண. கட்டளைக்குரவரால் ஓர்சுற்றுலா ஒழுங்குபண்ணப்பட்டது. பாடகர் அனைவரும் 17-4-56 செவ்வாய்க்கிழமைகாலை 6 மணிக்குத் திவ்வியபூசை கண்டு சற்பிரசாதம்பெற்றுக்கொண்டு, 8 மணியளவில் புறப்பட்டுக் கல்முனையையடைந்தனர். அங்கு திரு. பி. அலோசியஸ், எஸ். எம். தியோப்பிலஸ் என்பவர்களால் வரவேற்கப்பட்டுத் தோட்டஉபசாரணை அளிக்கப்பட்டது.

10-30 மணிக்கு அவ்விடத்தைவிட்டு வெளியேறிக் கோமாரியை அடைந்தனர். அங்குபல இடங்களையும் சுற்றிப்பார்த்தபின் அர்ச். மிக்கேற் சம்மனசானவர் ஆலயத்தைஅடைந்து மதியப் போசனமருந்தினர். 3-30 மணிக்கு அங்கிருந்து திரும்பும் வழியிலே திருக்கோவில் அர்ச். சூசையப்பர் ஆலயத்தையும், அக்கரைப்பற்றுபரிசுத்த ஆரோக்கியமாதா ஆலயத்தையும் தரிசித்துக்கொண்டு கல்முனையை அடைந்து தேநீர்அருந்தினர். 7 மணியளவில் தங்கள்இல்லம் வந்தடைந்தனர்.

**தேவஅழைத்தல் :—** இப்பங்கைச் சேர்ந்த திரு. எஸ். சவிரிமுத்து – திருமதி மார்கிறெற் தம்பதிகளின் மகளாகிய செல்வி சவிரிமுத்து மேரிஎன்பவருக்குத் தாய்தந்தையரின் மன்றாட்டாலும், அவரின் பக்திமுயற்சியினாலும் தேவஅழைத்தல் கிடைத்தது. இவர் மேற்றிராணியாண்டவரினதும், கட்டளைக்குரவரினதும், பிரான்சிஸ்கன் சபைச் சிரேஷ்டதாயாரினதும் அனுமதிபெற்று 22-4-56 ஞாயிற்றுக்கிழமை தனதுதாய்தந்தையர், சோதரர் சோதரிகளுடன் கொழும்பிலுள்ள பிரான்சீஸ்கன்சபை நவகன்னிகாமடத்துக்குச் சென்றுள்ளார். இவர்போகும்போது பங்குக்குரவர் வண. ஜோர்ஜ் ஈ. எல். வம்பேக் சுவாமியாரும், அநேகம் பங்குக்கிறீஸ்தவர்களும் புகையிரதஸ்தானத்துக்குச் சென்று அவரை வழியனுப்பிவைத்தனர்.

**பெயர்கொண்ட பெருநாள் :** எங்கள் கட்டளைக்குரவர் வண. ஜோர்ஜ் ஈ. எல். வம்பேக்சுவாமியவர்களின் பெயர்கொண்ட அர்ச். ஜோர்ஜியார்திருநாள் 23-4-56 திங்கட்கிழமை விமரிசையுடன்கொண்டாடப்பட்டது. காலை 6 மணிக்குப் பாட்டுப்பூசை நடந்தேறியது. அவ்வேளை அநேகம்கிறீஸ்தவர்கள் சமுகங்கொடுத்துச் சற்பிரசாதம் அருந்தினர். பூசைமுடிந்ததுமுதல் நாள்முழுவதும் கிறீஸ்தவர்கள் கூட்டம் கூட்டமாகவந்து தந்தையைச்சந்தித்து வாழ்த்திச்சென்றனர். கட்டளைக்குரவர் தமதுபெருநாள் சந்தோஷத்தையிட்டுச் சிலகுருமாருக்குத் தமதுஇல்லத்தில் மதியவிருந்தளித்தார்.

**மெய்விவாகம் :** இங்கு கிளெண்ணி ஆண்பாடசாலை ஆசிரியரான திரு. பிரான்சீஸ் ஜோண் அவர்கட்கும், திருமதி எஸ். பி. சகாயநாயகி ஆசிரியைக்கும்சென்ற25-4-56புதன்கிழமை மெய்விவாகம் கல்முனை, திருஇருதயநாதர் ஆலயத்தில் விமரிசையுடன் நடந்தேறியது. வண. ஹென்றி பொன்னையா சுவாமியவர்கள் திருச்சடங்கை நிறைவேற்றினர். அக்கரைப்பற்றுக் கட்டளைக்குரவர் வண. ஜி. குக் சுவாமியவர்கள் திவ்வியபூசைப்பலி நிறைவேற்றினார். தாண்டவன்வெளிக் கட்டளைக்குரவரான வண. ஜி. ஈ. எல். வம்பேக் சுவாமியவர்கள் மெய்விவாகத்தின்மகத்துவம், சமுசாரிகளின்கடமைகள் என்பனபற்றி ஆரியபிரசங்கம்ஒன்று செய்தார். இவ்வைபவங்களின்போது தம்பதிகளின் பெற்றோர், உறவினர், சிநேகிதர் திரளாகச் சமுகங்கொடுத்திருந்தார்கள்.

**பூசைப் பரிசாரகரின் உல்லாச யாத்திரை :** பரிசுத்த வியாகுலமாதா கோவில் பங்கைச்சேர்ந்த பூசைப்பரிசாரகர்கூட்ட அங்கத்தவர்கள் கட்டளைக்குரவர் வண. ஜோர்ஜ் ஈ. எல். வம்பேக்சுவாமியவர்களுடன் தங்கள் வருடாந்த உல்லாசயாத்திரையைச் சென்ற 28-4-56 சனிக்கிழமை நடத்தினர். காலை 6மணிக்கு அனைவோரும் திவ்விய பூசைகண்டு, சற்பிரசாதம்பெற்றுக் கொண்டு,அக்கரைப்பற்றுக்குப்பிரயாணமாகினர். அங்குபோய்ச்சேர்ந்து பல்வேறு இடங்களையும் பார்வையிட்டபின் பரிசுத்த ஆரோக்கியமாதா ஆலயத்தில் மதியப்போசனம் அருந்தினர். பிற்பகல் 3-30 மணிக்கு அங்கிருந்து வெளிகொண்டு 7மணியளவில் தங்கள் இல்லம் வந்தடைந்தனர்.

— நிருபர்

---

### திரு. பே. லூர்தம்மாஅவர்களின் தேகவியோகம்

மயிலிட்டியில் வசிப்பவரும், திரு. அ. பேதுருப்பிள்ளையின் மனைவியுமாகிய லூர்தம்மா சென்றபங்குனி 29-ந் திகதி பெரியவியாழக்கிழமை யன்று பி. ப. 2 மணியளவில் மயிலிட்டிக் கட்டளைக்குரவர் வண. ஏ. எஸ். சிங்கராயர் சுவாமியார் கரங்களினால் கடைசித் தேவதிரவிய அனுமானங்களைப்பெற்று மரணமெய்தினர். இச்செய்தி அவரது செல்வப்புதல்வர்களுக்கும், மற்றும்இனசனர் நண்பர்களுக்கும்பெருங் கவலையைத் தருவதாயிற்று. மரிக்கும்போது இவருக்குவயது 31. இவருக்கு மூன்று ஆண்பிள்ளைகளும், நான்கு பெண்பிள்ளைகளும்உளர். இவர்தனது அரிய கணவருடனும், செல்வப்புதல்வர்களுடனும், மற்றும்இனசனர் நண்பர்களுடனும் ஒற்றுமையாகவும், அன்பாகவும் தனதுவாழ்க்கையை நடத்திவந்தார். இவர்இறந்தமறுநாள் காலை 9 மணியளவில் கட்டளைக்குருவானவர் துக்கசங்கீதங்கள்பாட, தேவமாதாகூட்டக்காரரும், திரளான சனங்களும் அணியாய் நடந்துசென்று அவரதுபூதவுடலை அடக்கஞ்செய்தனர்.

R. I. P. அ. பே.

---

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின் திருஇருதய இரக்கத்தாலும், மாசில்லாத திருஇருதயநாயகியின் அருளாலும், அர்ச். அந்தோனியார், செபஸ்தியார், யூதாததேயு, பத்தாம்பத்திநாதர், பிலோமினம்மாள் இவர்களின்மன்றாட்டினாலும் எனதுசகோதரிக்கும், மகளுக்கும்வந்த குத்துவியாதி சற்றேகுணமடைந்து வருகிறது. அத்துடன் அவவின் மகனும் பரீட்சையில்சித்தியும், நான்கேட்ட அவசிய மன்றாட்டுகளும் கிடைக்கப் பெற்றமையால் நன்றியறிதலாக இதைப் பிரசுரிக்கிறேன்.

தேவதாயின் அடிமை

கொழும்பு A. A.

---

✠

# IN MEMORIAM

**The first anniversary of the death of**

**THE REV. BROTHER VICTOR JOSEPH, C.S.S.R.**

*(Son of the late S. Joseph, Head Guard, C.G.R.)*

BORN 14-XI-1934

DIED 9-V-1955

Professed as Redemptorist 8-XII-54.

Died at Bangalore, India, whilst studying for the Priesthood.

*Jesus Mercy*

Through waters deep, beyond our ken,
Were Angels drawing near;
To bear from hence to heavenly home,
The one we loved so dear.

No loved hands braced his drooping strength,
No home voice bade good-bye;
Alone, afar, he soared on high,
But God Himself was high.

In grief mute we remember him,
Mourn him from day to day,
Our loss of him with all its pangs,
Ah! who can ever say.

*(Inserted by his sorrow stricken Mother Mrs. Magdalene Joseph and by his Brothers and Sisters.)*

"Saint Elmo's",
No. 50, Chapel Street,
Jaffna.

---

### கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 147**

கரையூர், யாழ்ப்பாணம்

(1) சுபானிப்பிள்ளை அம்புறோஸ் டொமினிக்கும், பெண்

(2) மேரி யோசேப்பின்

— வழக்காளிகள்

எதிராக

சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்

(1) சந்தியாப்பிள்ளை அந்தோனிப் பிள்ளையும், பெண்

(2) எலிசபேத் — எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 147-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1956-ம் ஆண்டு ஆடிமாதம் 3-ந் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**காணி விபரம்**

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக், சுண்டிக்குளி கோயிற்பற்று, கரையூர் இறை 'செம்பன் புளியடி வயல்' நெற்பரப்பு $3\frac{1}{4}$ ம், வீடும், அதைச் சேர்ந்தவைகளும். எல்லை, கிழக்கு : N. A. யோசேப்பும், மறுபேர்களுடையவும் ஆதனம்; வடக்கு : றோட்டு ; மேற்கு : யேசுதாசனின்பெண் D. இராசம்மாவின் ஆதனம் ; தெற்கு : கென்றி பற்றிக் அரசநிலையின் உரிமையாளரின் ஆதனம். இதடங்கலும்.

செ. இரத்தினசபாபதி,
கொமிஷனர்

51, 4-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
2-5-56

---

### அகில–இலங்கை ......

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

உரோமைநகரில் நடந்தமகாநாட்டில் கருதினல் கிறுசியாஸ்ஆண்டவர் பேசியபோது: "சேனை தனதுசாதாரண மக்களைக்கொண்டு அதிசயத்துக்குரிய சேவையைச்செய்யக் கூடுமாயிருப்பது தெய்வீகஆற்றல்தான்" என்றுபகர்ந்துள்ளார். யுத்தகாலத்தில் அபாயக்குழல் கேட்கும்பொழுதும் விமானிகள் சேனைக்கூட்டத்தை நடத்துகிறார்கள். சயரோகிகள் சலிக்காது உற்சாகத்துடன் கூடுகிறார்கள். நெற்றிவியர்வை நிலத்தில்விழ உழைக்கும் தொழிலாளிகள் பெருமிதத்துடன் அயராது, சேனையின் இராக்கினியாகிய தேவமாதாவின் பாதுகாப்பின்கீழ் உச்சிதகொர்ச்சிதத்துடன் தொண்டாற்றுகிறார்கள், உண்மையாகவேபாப்பாசரின்பிரதிநிதி கூறுவதுபோல் சேனையானது, "**தற்காலஉலகின் அதிசயம்**"என்பதை நாம் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

---

### நூருவதுதின உற்சவம்

நீர்கொழும்பு, அர்ச். மரியநாயகிகல்லூரியிலே சென்ற 25-4-56 புதன்கிழமை சதாசகாயமாதாவின் நூறுவது நவதின உற்சவம் அதிசிறப்பாகக்கொண்டாடப்பட்டது. இந்தநவநாள் பக்தி முயற்சிமுதலில் ஓர்ஆசிரியரினதும், 25 மாணவரினதும் முயற்சியால் வகுப்பறைஒன்றில் நடத்தப்பட்டுப் பின்னர் எவருமே இதில் பங்குபற்றத்தக்கதாகப் பொதுஇடத்தில் 1-6-54 முதல் நடத்தப்பட்டுவரலாயிற்று. அன்றுதொடக்கம் 25-4-56வரையும் தாயாரின்உதவியால் தடையின்றிவிடுதலைநாட்களிலும் தொடர்ந்துநடைபெற்றது. நூறுவது நவதினமன்று காலை 7 மணியளவில் திவ்வியபூசைநிறைவேற்றித் தேவநற்கருணை ஆசீர்வாதம் அருளப்பட்டது. காலைப்போசனத்தின்பின் யாவரும் தாயார்எழுந்தருளியிருந்த பீடத்தின் முன் கூடினார்கள். மாணவரின்பெருமுயற்சியால் பீடம்அழகுற்றுச் சிங்காரிக்கப்பட்டிருந்தது. முதலில் இந்நவநாளை ஆரம்பித்த ஆசிரியர் தமதுமனச் சந்தோஷத்தைத் தெரிவித்துக்கொண்டார். செபத்தின்பின் ஓர்குருவானவர் எழுந்து, மரியாயைநேசித்த ஓர்உத்தம இளம்வாலிபனின் சரிதையைஎடுத்துக் கூறி, நாம்எப்படித்தாயை நேசிக்க வேண்டுமென விளக்கினின்றார். அதன்மேல் தலைமையாசிரியர்பேசி நன்றி தெரிவித்துக்கொண்டார். பின் தாயார் பேரில் இனிய கானங்களைப் பாடினர். கல்லூரிப்பழைய மாணவராயிருந்த ஓர் குருவானவர் தாயின் அனுகூலத்தைப் பெறவந்திருந்த மக்களுக்கு ஆசீர்வாதமளித்தார். பின்யாவரும் "மரியாயே வாழ்க!" என்று மாதாவைவாழ்த்தித் திரும்பினார்கள்.

மரியாயி மைந்தன்

---

### நேர்த்தியின் பூர்த்தி

எங்கள் அன்பான சதாசகாய இராக்கினியின் மன்றாட்டினால் நான் கேட்டகருமங்கள் அனுகூலம் அளித்ததினால்அவவுக்கு நன்றித்துதி கூறுகிறோம். இன்னும் நான்கேட்டுவரும் மன்றாட்டுகளும் கிடைக்கும்படி தாயார் உதவிபுரிவாராக. இதை நேர்த்திப்படி பிரசுரிக்கிறேன்.

யாழ்ப்பாணம். M. A. L.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, May 3-1956.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புனித வீரர்



## மேற்றிராணியாண்டவரின் கடிதம்

**கிறீஸ்துவில் எமக்குமிகவும் அருமையான பிள்ளைகளே !**

தேவமாதாவின் வணக்கமாதம் வந்துவிட்டது. எமது பரலோக அன்னை



யைப் புகழ்ந்துகொண்டாடும் மாதமிது. உங்கள் விசாரணைப் பங்கிலும் கோவில் பள்ளிக்கூடங்களிலும் இந்தப்பக்தியனுசரிக்கப்படும்.

தேவதாயின் பிள்ளைகளாகிய நாம் எம் அன்னையின் குணாதிசயங்களைத் தியானித்து அவைகளைப் பின்பற்ற வேண்டும். தேவன் அவவுக்கருளிய வரங்களையிட்டு அவரைத் துதித்து நன்றி கூறி, எம்அன்னையையும் பாராட்ட வேண்டும்.

இந்தவணக்கமாதத்தை உங்கள் ஆத்தும ஞானச் சீவியம் வளருவதற்கு ஏற்ற காலமாக்கிக்கொள்ளவும் வேண்டும். தேவதாயார் வரப்பிரசாதங்களின் மத்தியஸ்தி. எமது இரட்சணியத்துக்காகக் கிறீஸ்துநாதருடன் பாடுபட்டவ. ஆகையால், இந்தத்தாயாரின் உதவியை இம்மாதத்தில் விசேஷவிதமாய்க் கேளுங்கள்.

தேவஊழியத்திற்கு அநேகர் தங்களை அர்ப்பணஞ் செய்யவேணுமென்று நாம் இவ்வருடத்தில் மன்றாடிவருகிறோம். அந்தக்கருத்தை இம்மாதத்திலும் நினைவு கூருங்கள்.

நீங்கள் வகுப்புவகுப்பாக மாதாவின் பாதத்தில் மலர்களைச் சாத்துவீர்கள். அவைகள் எல்லாம் உங்கள் புண்ணியங்களுக்குக் குறிப்பாயிருக்கட்டும்.

வணக்கமாதத்தின் பிரதான கிருத்தியமாகச் செபமாலை செபிப்பீர்கள். அவ்வேளை உலகத்திலுள்ள சிறுவருக்காகவும் செபியுங்கள். பரிசுத்தபிதாவின் கருத்துகளுக்காகவும், எமது நாட்டில் திருச்சபை செழித்தோங்கி வளரவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் ஞானமேய்ப்பர்களுக்காகவுஞ் செபியுங்கள்.

அமலோற்பவ அன்னை உங்களைத் தமது பாதுகாவலில்வைத்துத் தமது திருச்சுதனின்சாயலை உங்களில் பதியச் செய்வாராக. இவ்வரங்களுக்கு அச்சாரமாக நாம்உங்களை ஆசீர்வதிக்கிறோம்.

✠ ஜே. எமிலியானுஸ்பிள்ளை, O. M. I.,
யாழ்ப்பாண மேற்றிராணியார்.

2-5-56

# பேனு நண்பர்களுக்குக் கடிதம் வரைதல்

: கே. எஸ். ஜீ. பேரேரா :

சென்ற 12-4-56-இல் வெளியான புனிதவீரரில் "தாரகை" என்ற பெயரைக்கொண்ட எழுத்தாளர் "உங்கள் ஓய்வுநேரத் தொழில்கள்" என்ற தலையங்கத்தின்கீழ் ஓர்கட்டுரை வரைந்திருந்தார். அதில் பொழுதுபோக்குத் தொழில்கள் சிலவற்றைக் குறித்திருந்தார். பொழுதுபோக்குத் தொழில்கள் புனிதவீரருக்கு மிகஅவசியமென்பதைக்கருதி அவைகள் ஒவ்வொன்றையும் விவரித்தெழுத எண்ணினேன். இவ்வாரம் "பேனு நண்பருக்குக் கடிதமெழுதல்" என்பதைக் கவனிப்போம்.

நாம் வானெலியின் வாயிலாகவும், புத்தகங்களின் மூலமும், தின, வார, மாதப் பத்திரிகைகளாலும், இன்னும் படக்காட்சிகளாலும் அந்நியநாடுகளும் அந்நாட்டாரைப்பற்றியும் ஏனையவிஷயங்களை அறிகிறோம். மாணவர் அனைவருக்கும் அத்தகைய விஷயங்களை அறிய மேற்கூறிய வசதிகள் கிடைப்பதில்லை. ஆனாலும், மாணவர்கள் அனைவருக்கும் கடிதமெழுதலாம். இதன் காரணமாகவே பேனுநண்பர்களுக்குக் கடிதமெழுதல் எனும் பொழுது போக்குத்தொழில் நம்மாணவ உலகில் மிக விசேஷம்பெற்றுள்ளது. இப் பொழுது போக்குத்தொழில் நம்மத்தியில் விசேஷம்பெற இன்னுமோர் காரணமுண்டு. இத்தொழிலுடன் சம்பந்தமான மற்றும் அநேக பொழுது போக்குத் தொழில்கள் உள்ளன. அவை காட்சிப் பத்திரம் சேர்த்தல், முத்திரை, புராதன நாணயங்கள் சேர்த்தல் என்பன. ஓர் தேசத்திலிருந்து மற்றோர் தேசத்திலிருக்கும் பேனுநண்பர்களுக்கு எழுதுபவர்களுக்கு அத்தேச முத்திரைகள், புராதனநாணயங்கள், காட்சிப்பத்திரங்கள் முதலியவற்றைப் பெற்றுக்கொள்ளலாம். சில தடவைகளில் இருவரதும் பொழுதுபோக்குத்தொழில் ஒன்றாயிருக்கக்கூடும் உதாரணமாக, இருவரும் முத்திரை சேர்த்தல், ஒருவரிடம் அற்றவற்றை மற்றவரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம், அல்லது ஒருவரிடம் மீதியாகவுள்ளவற்றைக் கொடுத்து அதற்குப்பதிலாக வேறெவைகளைப்பெறலாம். அயல்நாடுகளில் இத்தகைய நண்பர்கள் இல்லாவிடில் இவைகளை விலைக்கே வாங்கவேண்டும். விலைக்கு வாங்குதல் அரிதாயிருக்கக்கூடும். அவைகள் பிறநாடுகளிற் கிடைத்தாலும் அவைகளைப் பெற்றுக்கொள்ள வசதியில்லாதிருக்கக் கூடும். ஆனல், அந்நாடுகளில் பேனு நண்பர்கள் இருந்தால் இக்கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியதில்லை. இவைகளைப் பெற்றுத்துக்கொள்ள நிச்சயமான வழிதான் பேனுநண்பர்களுக்கெழுதுதல். இதன் காரணமாகத்தான் இன்றைய மாணவஉலகின் பெரும்பான்மையினேரது பொழுதுபோக்குத் தொழில் பேனுநண்பர்களுக்குக் கடிதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரைதல். இத்தகைய போதிய காரணங்களிருக்க இப் பொழுதுபோக்குத் தொழிலைப் பெரும்பான்மையோர் ஏற்றுக்கொள்ளா திருப்பார்களா?

உங்களில் எவராவது பிறதேசசத்துச் சரித்திரம், அல்லது பூமிசாஸ்திரத்தில் ஆவல் கொண்டிருந்தால் பேனநண்பர்களுக்கெழுதுதல் அவ்வாசையை வளரச்செய்யும். பேன நண்பரின் மூலம் அவர்தேசத்து அரசியல்திட்டம், பொருளாதாரநிலை, கல்விநிலை, சாதிசமயங்களின் நிலைகளைப்பற்றி முதல்தரசெய்திகளைப் பெறலாம். மாணவர்களுக்குப் புத்தக அறிவுமட்டும் போதாது. புத்தக அறிவுமட்டும் ஒருவரது கல்வியை, மனப்பான்மையைக் குட்டிச்சுவராக்கிவிடும். பரந்தவிரிந்த நோக்கமுள்ளவர்களாகவும், பரந்த மனப்பான்மையுள்ளவர்களாகவும் எதிர்கால இலங்கையில் அருஞ்சேவைபுரியவிருக்கும் தற்காலமாணவ உலகில் தொண்டுபுரியும்நாம் சிறந்து விளங்கவேண்டும். வகுப்பில் பாடங்கேட்பதால் நாம் அடையும்கல்வி நூற்றுக்கு ஓர் குறைந்தவீதந்தான். நமதுவாசினையாலும், நமதுமுயற்சியாலும், மற்றோருடன் ஒன்றுசேர்ந்து பழகுவதால் நாம்வகுப்பில் அடையும் அறிவைப் பூரணமாக்குகிறோம். வகுப்பில் அடையும் அறிவைப் பூரணமாக்கும் வழிகளிலொன்றுதான் பேனநண்பர்களுக்குக் கடிதம்வரைதல்.

ஆகவே பொழுதுபோக்குத் தொழில்களுள் சிறந்ததொன்றுதான் பேன நண்பர்களுக்கு எழுதுதல். புனித வீரர் அனைவரும் இப் பொழுது போக்குத் தொழிலைக் கையாளவேண்டும். அயல் நாடுகளில் பேனநண்பர்களைப் பெறப் "புனித வீரரின்" மூலம் அன்னை உதவியளிப்பாரென்று நான் நம்புகிறேன். இம்மாதம் 7-ந் திகதி வெளியாகிய "டெயிலி நியூசில்" (Daily News) பின்வரும் விலாசம் கிடைத்தது. இம்முகவரிக்கு எழுதினால் அவுஸ்திரேலியாவிலும் நியூசிலாந்திலுமிருந்து பேன நண்பர்களைத் தேடித்தருவார்:

"Rev. Fr. Tom's Corner"
c/o The Editor,
Annals Office,
Kensington, N.S.W., Australia.

புனித வீரரே! இன்றே பேனநண்பர்களுக்கு எழுதுங்கள்.

---

## கணிதப் பகுதி

1. ஒரு எண்ணை ஒன்றாலும் ஏழாலும் மிச்சமின்றிப் பிரிக்கலாம். அதே எண்ணை 2, 3, 4, 5, 6 என்னும் எண்களால் பிரித்தால் ஒன்று மிகுந்திருக்கும். அவ்வெண் என்ன?

2. ஒருதாய் 3 ரொட்டிகளை அண்ணன், தம்பி இருவருக்கும் பிய்க்காமல் சரிசமனைப் பங்கிட்டுக் கொடுக்கும்படி அவர்களுடைய சகோதரியிடம் கொடுத்தாள். அதை நீர் பங்கிடுவீரானால், எவ்வாறு பங்கிடுவீர்?

3. நீற்று தனது தாயிடமிருந்து ஒரு தொகைப்பணத்தைப் பெற்றாள். அதே அளவு பணத்தைத் தன் தகப்பனிடமிருந்தும் பெற்றாள். இருவரிடமும் பெற்றபணத்தில் 8 ரூபாவுக்கு ஓர் சேலை வாங்கினாள். பின்னர் மிகுதிப் பணத்தைப்போல் ஒருமடங்கைத் தன் மாமாவிடமிருந்து பெற்றாள். அவற்றிலும் 8 ரூபாவுக்குத் தம்பிக்கு ஓர் காற்சட்டை வாங்கினாள். பின்பு மிகுதிப் பணத்தைப்போல ஒரு மடங்கைத் தன் சிறியதகப்பனிடமிருந்து பெற்றாள். இப்பொழுதும் 8 ரூபாவுக்கு ஓர் சேலைவாங்கினபடியால் பணம் மிஞ்சவில்லை. நீற்று தாயிடம் பெற்றபணம் எவ்வளவு?

---

உங்கள் விஷயதானங்களை மேல்வரும் முகவரிக்கு அனுப்புங்கள்:

"அன்னை", சஞ்சூசையப்பர் தாபனம்,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடைந்தபாத மாதா

நமது பரிசுத்த கன்னித்தாயார் "சதாசகாயமாதா" என்றும், "வியாகுலங்களின் மாதா" என்றும் இவ்வாறு பலநாமங்களால் அழைக்கப்பட்டு வருவதை நாம் அறிந்திருக்கிறோம். ஆனல், "உடைந்த பாதத்தின் மாதா" என்னும் ஓர் பெயர் புனையப்பட்டிருப்பதை நீங்கள் எப்போதாவது கேள்விப்பட்டதுண்டா? தேவதாயார் உடைந்தபாதத்தோடு இருந்ததேஇல்லை. ஆனல், இது வேண்டுமென அவவைப் பரிகாசம் செய்வதைப்போலவும், "ஸ்திரிகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவள்" என்ற நற்புகழையும் தகுதியான கௌரவத்தையும் குறைப்பதைப்போலவும் இருக்கின்றது.

நமது பரிசுத்ததேவதாயார் உடைந்த பாதத்தை உடையவர் என ரூபிகரிக்கவும் முடியாது. அவவும் சகலமனிதரைப் போலச் சகலமும் சம்பூரணமாக நிறையப்பெற்றவ. "பிரியதத்தத்தினலே பூரணமானவளே" என்ற சம்மனசின் வாழ்த்தும் இதைத்தான் குறிப்பிடுகின்றது. ஒருவன் உடைந்தபாதத்துடன் இருக்கமுடியுமா? முடியாது.

ஆயினும் அந்த ஆசீர்வதிக்கப்பட்ட தாயார் ஓர் உடைந்த பாதத்தை உடையவவாகவே இருந்தா. இதன்நிமித்தமே இந்நாமம் அவவுக்குத் தகுதியாக அமைந்தது. இந்நாமமானது ஓர் யுத்தத்தின் மத்தியகாலத்தில் அமெரிக்காவைப் பிறப்பிடமாகக் கொண்ட சில போர்வீரரால்அவவுக்கு அளிக்கப்பட்டது.

"சமாதானத்தின் இராக்கினி, பரலோகத்துக்கு ஆரோபணமான இராக்கினி" என்ற பெயர்களைப்போல் இப்பெயரும் பிரார்த்தனைகளில் இடம் பெறவில்லை. அல்லது பிறநாடுகளிலிருந்து சகலசனங்களும் வந்து வணங்கக்கூடிய ஓர் பிரசித்திபெற்ற பரிசுத்ததலமாவதற்குரிய கவர்ச்சிகரமான நாமமாகவும் இது அமையவில்லை. ஆனல், எவ்வித ஆட்சேபனையுமின்றி இப்பெயரைத் தேவதாயார் விரும்பினர். மற்ற எல்லாப் பெயர்களையும்விட இதையேஅவ மிகவும் மேலாகநேசித்து வந்தாபோலும். இப்பெயர் எங்ஙனம் அவவுக்கு அளிக்கப்பட்டது என்பதை அவ மோட்சத்திலுள்ள சகலமோட்சவாசிகட்கும் கூறிக்களைத்துப்போய்விட்டா.

தேவதாயாருக்கு இந்த நாமத்தைப் புனைந்த அமெரிக்க போர்வீரர்கள் ஓர் நாள் மாலைவேளையில் போர்ப்பிராந்தியங்களைக் காவல்செய்துவிட்டுத் திரும்பியபின் ஓர் இத்தாலிய கிராமத்தினூடாக வந்தார்கள். அதன் அருகாமையில் காணப்பட்ட பட்டணமானது, அழிந்து சிதைவுற்ற, புராதன கிராமங்களைப்போல் காட்சியளித்தது. மனிதரால் கைவிடப்பட்டதும், இடிந்து நொறுங்குண்டதும், பிளவுபட்ட மரத்தூண்களையுடையதுமான கட்டிடங்கள் அதிகமாகக் காணப்பட்டன. தெருவீதிகளெல்லாம் குண்டுகளால் தகர்த்தெறியப்பட்டும், கிடங்குகளாக்கப்பட்டும், கரடுமுரடான நிலையில் காட்சியளித்தன. தந்திக்கம்பிகளெல்லாம் துண்டிக்கப்பட்டு, ஒழுங்கற்றமுறையில் தந்தித்தூண்களில் தொங்கிக்கொண்டிருந்தன.

அப்போர்வீரர்கள்அங்குகாணப்பட்ட கிடங்குகளின் அருகாமையிலும் மலை அடிவாரங்களிலும் அதன் மேற்பாகங்களிலும் சென்றபோது அவர்கள் ஓர் சவக்காலையின் ஊடாகப் பிரயாணம் செய்வதைப்போல் உணர்ந்தார்கள். ஏனெனில், அங்கே எண்ணமுடியாத பிணக்குவியல்களும், படைபடையான அழுக்குக்குவியல்களும் காணப்பட்டன. மேலும் இவை துர்நாற்றத்தையுங் கொடுத்தன.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org